ஞானசம்பந்தம்

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

மலர் 12] நந்தன௵ தைமீ 10—2—53. [இதழ் 3

வைத்தீசுவரன்கோயில்

அனாதைக் குழந்தைகள் விடுதி திறப்பு விழாவில்:

சென்னை அரசாங்க அறநிலைய அமைச்சர்,

கனம் ஸ்ரீ K. வேங்கடசாமி நாயுடு B.A., B.L., அவர்களுக்கு வரவேற்பு.

ஆசிரியர்: நாகலிங்கத் தம்பிரான்.
உதவி ஆசிரியர் கண்டபாணி தேசிகர்.
தருமபுர ஆதீன

தருமபுர ஆதீன வெளியீடு.

திருக்குறள் - உரைவளம்

காமத்துப்பால்.

ஏனைய பால்களைப் போலவே உரைப்பகுதி, மேற்கோள்பகுதி, ஒப்புமைப்பகுதி, முதுமொழி வெண்பாக்கள், ஆகிய ஐந்து பிரிவுகளில் உரை வளம் தொகுக்கப்பெற்றுள்ளன.

தொகுப்பாசிரியர் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களால் 51 தலைப்புகளில் ஓர் அரிய பெரிய நூலாராய்ச்சி எழுதிச் சேர்க்கப்பெற்றுள்ளது.

M. O. மூலம் பணம் அனுப்பிப் பெறவேண்டும்.

கிரௌன் 1×4 சைஸ் பக்கம் 520

காலிகோ கட்டடம் விலை ரூ. 6—0—0

தபால்கூலி வகையரு 1—0—0

கிடைக்குமிடம்:—

மானேஜர்,

தருமபுர ஆதீனம்.

தருமபுரம், மாயூரம் P. O.

தஞ்சாவூர் ஜில்லா.

தருமபுர ஆதீனத்தில்:



சென்னை அறநிலைய இலாகா அமைச்சர்

கனம் ஸ்ரீ K. வேங்கடசாமிநாயுடு B. A., B. L., அவர்களுக்கு

வரவேற்பு



கனம் அமைச்சர் அவர்களுடன்
ஆதீனக் கல்விநிலைய மாணவர்களும் ஆசிரியர்களும்

வைத்தீஸ்வரன் கோயிலில்
அனாதைக் குழந்தைகள் விடுதி திறப்புவிழா.



ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும்

வேலூர் தேவஸ்தான விடுதி அஸ்திவாரக்கல் நாட்டுவிழா,



அமைச்சர் கனம் ஸ்ரீ K. வேங்கடசாமி நாயுடு அவர்கள்
அஸ்திவாரக்கல் அமைத்தல்.

96

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 12] நந்தனஹு தைமீ 10—2—53. [இதழ் 3

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினுய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

ஏழை இல்லம்.

சமயப் பாதுகாப்பிற்குச் சமயபோதனை சிறந்ததொண்டு, உபதேசம் உயர்ந்ததொண்டு, ஆனாலும் நமது சமய மக்கள் வறுமையால் வாடியும் ஆதரவற்றும் வேற்றுச்சமயத்தவரால் வேற்றுச்சமயத்தை விரும்புகிறார்கள். வேற்றுச்சமயத்தவர்களும் விரும்பி ஏற்கிறார்கள், அந்தநிலையில் சமயப்பாதுகாப்பு உபதேசத்தையும் போதனையையும்விட மிக இன்றியமையாததாகிறது. பரிபாகம் இன்மையால் - சமய உண்மைகளை அறிந்துகொள்ளும் ஆற்றல் இல்லாமையால் மதம் மாறும் மக்களைக் காட்டிலும் ஏழ்மை இதனைவிட்டு எங்கோ அழைத்துக்கொண்டுபோகுமானால் அது இரங்கத்தக்க செய்தியல்லவா?

அனாதைகளில் உழைத்து ஓய்ந்து, உறவினர்களால் கைவிடப்பட்டவர்கள் ஒருவகையினர்; பிறந்த அன்றே உலகத்தை நம்பி வாழப் பெற்றோர்களால் கைவிடப்பட்டவர்கள் ஒருவகையினர். காப்பாற்றக் கைவளமில்லாமல் கைவிடப்பட்டவர்கள் ஒருவகையார்; வினைத்தெரிந்து காரணத்தோடோ காரணமில்லாமலோ பெற்றோரைவிட்டுப் பிரிந்தவர்கள் ஒருவகையினர். இவர்களில் ஓய்ந்த கிழங்களுக்கும் அங்கவீனர்

களுக்கும், சிறுவர்களுக்குமே பாதுகாப்பு தேவை, அதிலும் ஓய்ந்தவர்கள் ஒழியுங்காலத்தை எதிர்நோக்கி அண்மையி லிருப்பவர்கள்; இளைஞர்கள் பலகாலம் வாழவேண்டிய வர்கள். எந்தப் புற்றில் எந்தப்பாம்பு இருக்கிறதோ என்பது போல - எருக்கம்புதரில் முளைத்த முல்லைப் பூப்போல எத் தனையோ அறிவாளிகள் வருங்கால இந்தியாவிற்கு வழிகாட்டி கள் இன்று அனுதைகளாக இருக்கலாம், அவர்களை அரண் செய்து அறிவுத்துறையில் ஊக்கிவிட்டால் - ஊட்டுகின்ற ஒவ்வொரு பிடிச்சோற்ருேடும் ஒவ்வொருவாய்ப் பாலோடும் சமய உண்மைகளைக் கலந்து ஊட்டிவிட்டால் நமது சமய வளர்ச்சி எப்படியெல்லாம் உயரும். இது அல்லவா சமயப் பாதுகாப்பிற்கு இன்றியமையாது செய்யப்படும் வேலை, மாற்று மதங்கள் எப்படியெல்லாம் வேலை செய்கின்றனவோ அப்படியெல்லாம் செய்து, ஆதரவளிக்க வேண்டியதல்லவா உண்மைச்சமயியின் உள்ளமாயிருத்தல் வேண்டும், இவற்றை யெல்லாம் திருவுள்ளத்திலெண்ணியே எங்கள் 25வது ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், தாம் ஆட்சி ஏற்ற அன்றுமுதல் இன்றுவரை அனுதாசிரமம் ஏற்படுத்த ஏற்றன செய்து வந்தார்கள். பருவத்தில் பழுத்தலும், வரவரக் கண்டு ஆராய்தலும் எங்கள் ஆதிபரமாசாரிய சுவாமிகள் உபதேசம், அதன்படி அந்த முயற்சி இப்பொழுது முதிர்ந்து உருவாகியிருக்கிறது. 7—2—53ல் சனிக்கிழமை அன்று வைதீஸ்வரன்கோயிலில் ஸ்ரீ செல்வ முத்துக்குமரசுவாமியின் திருவருளால், ஆசிரமம் திறந்துவைக்கப்பெற்றது. அதனைத் திறந்துவைத்தவர்கள் அறநிலையப்பாதுகாப்பு அமைச்சர் கனம் K. வேங்கடசாமி நாயுடு அவர்கள். இதனை நாங்கள் மனமார வரவேற்கிறோம்.

ஒருகிளையில் ஏறியிருந்து அக்கிளையைப் பிரியாமலே சுற்றிலும் உள்ள பூக்களை எடுத்த சிவகாமியாண்டார்போல எங்கள் குருமகாசந்நிதானம் அவர்களும் சைவசித்தாந்த ஞான பீடத்து எழுந்தருளியிருந்தே காலத்திற்கும் - பொதுமக்கள் கருத்திற்கும் - சமயவளர்ச்சிக்கும் தக்க பணிகளை ஆற்றி வருகின்றார்கள் என்பதனை உலகம் அறிந்து போற்றுகிறது. பழமையிலிருந்தேபுதுமையைத்தழுவிப் புதுமையிலும்பழமை காணும் இவர்கள் பண்பாடு தமிழுலகிற்கு வழிகாட்டியாகும்.

இலக்கியச்சுவை

[ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களிடத்தில் ஒருநாள் காலை தமிழிலக்கியச்சுவைபற்றிய பேச்சு நிகழ்ந்தது. அப்பொழுது ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் அருளிய உரைகள் அனைத்திலும் இலக்கியச்சுவை மிளிர்ந்தது. அடியேனுக்கு அது பெருவிருந்தாயிற்று. அடியேன் அடைந்த இன்பத்தை அனைவரும் அடைதல்வேண்டும் என்ற விருப்பம் தோன்றிற்று. தோன்றவே, அவர்களது திருவுள்ளத்தி னின்றும் வெளிப்பட்டுவந்த இலக்கியத்தின்சுவையை இயன்ற அளவில் 'ஞானசம்பந்தத்தில்' எழுதிவரத் துணிந்தேன். அத் துணிவு தமிழ்ச்சுவையைப் பலர்க்கும் ஊட்டும் ஆதலின் நல்லதே ஆகும். அந்நாளில், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பெரியபுராணம், கம்பராமாயணம் முதலியவற்றிலிருந்து பல சிறந்த செய்யுட்களின் வாயிலாகத் தமிழிலக்கியச் சுவையை வழங்கியருளினார்கள். அவை கட்டுரையாக எழுதப்படு கின்றது.]

"சந்தர்ப்பத்தை அறிந்தால்தான் இன்பம் சிறக்கும். மனுவேந்தன் மகன் வீதிவிடங்கன் இராஜவீதியில் இராஜ குமாரர் – படையோர் முதலியோர் சூழத் தேர் ஊர்ந்து சென்றான். அரசிளங்குமரன் செல்லும் அம்மணிமாடவீதியில் ஒரு பசுக்கன்று துள்ளித்துடித்துங் குதித்தும் வந்தது. அதன் வரவு தனிப்பெருந் தருமம் என்ற தேவதை இரக்கம் அற்று, மனுச்சோழன் சத்திய சிந்தையைச் சோதித்ததுபோல் இருந் தது. அக்கன்றின் வரவு அப்பொழுது எவர்க்கும் தெரியா திருந்த ஒன்றே அதை மெய்ப்பிக்கும்.

வந்த கன்று தேர்ச்சக்கிரத்தில் அகப்பட்டு மாய்ந்தது. அதை அறிந்த பசு (தாய்) அலமந்து ஓடிற்று; வெம்பிற்று; அலறிற்று; சோர்ந்தது; மெய்நடுங்கிற்று; வீழ்ந்தது.

அதுகண்டான் அரசகுமாரன். அபாயம் வந்ததென்று அறிந்தான். சொல் தடுமாறவும் மனம் துயரம் அடையவும்

பெற்று அறிவழிந்தான். செய்வது இன்னதென்று தெரியா நிலையில் தேர்மேல் நின்று கீழ்இறங்கி விழுந்தான். ஒருவாறு தேறி எழுந்தான். பசுவைப்பார்த்துப் பதைத்தான்; கன்றை நோக்கிக் கலங்கினான்; தந்தைக்குத் தன்னால் வந்த பழியை எண்ணினான்; தன் பிறப்பை வெறுத்தான்; தருமசாஸ்திர விதிப்படி பரிகாரம் செய்யப் பிராமணர்களைச் சார்ந்தான். இவன் செய்தி இப்படியிருக்க, தன் கன்று இறந்ததற்கு ஆற்றாத் துயரம் உற்ற பசுவானது பெருமூச்சுவிட்டு, விம்மி, முகத்தில் கண்ணீர்ஒழுக, மனுச்சோழன் அரண்மனைவாயிலில் வந்து, ஆராய்ச்சிமணியைத் தன் கொம்பால் அடித்தது.

அதனால் எழுந்த அம்மணியோசை பழியைப் பரப்பும் பறையொலியோ? பாவத்தை வெளிப்படுத்தும் ஒலியோ? எமதர்மனது கடாவின் கழுத்திற்கட்டிய மணியொலியோ? என்று கருதும்படி மிகுந்து பரவிற்று. அது மனுநீதிமன்னன் செவியிற் புகுந்தது. உடனே சிங்காசனத்தினின்றும் இறங்கி வந்து வாயிலை அடைந்தான். அடையக் கண்ட காவலர் நடுக்கத்தொடும் வணங்கினர். பசுவந்ததும், வந்து வாயில் மணியை அடித்ததும் சொல்லினர்.

அதைக்கேட்ட அரசன் பசுவின் வருத்தத்தை நோக்கினான்; மந்திரிகளை நோக்கினான். அம்மந்திரிகளுள் அந் நிகழ்ச்சியை முழுதும் அறிந்த ஒருவன் அவ்வேந்தனை வணங்கிச் சொன்னான். அதை அறிவிக்கும் பாட்டே இப் பொழுது சேக்கிழார் சுவாமிகளது சொற்றிறனை விளக்க மேற்கொள்ளப்பட்டது.

"வளவநின் புதல்வன் ஆங்கோர் மணிநெடுந் தேர்மேல் ஏறி
அளவில்தேர்த் தானை சூழ அரசுலாந் தெருவிற் போங்கால்
இளையஆன் கன்று தேர்க்கால் இடைப்புகுந் திறந்த தாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து விளைத்ததித் தன்மை என்றான்."

இது மந்திரியின் வார்த்தையாக, மந்திரியாயிருந்து, அநுபவமுதிர்ந்து, உத்தமச்சோழப் பல்லவராயராய் விளங்கிய நம் சேக்கிழார் திருவாய்மலர்ந்தருளியதாதலின், இதிலுள்ள

எல்லாச் சொற்களும் கருத்துநுட்பம் விளக்கிநிற்கின்றன. மன்னவன், தன் மகன் வீதிவிடங்கன் தேரூர்ந்தபோது, பசுக் கன்று மாய்ந்ததால் வந்த பாவத்தால், தன் வளமெல்லாம் ஒழியுமோ என்று எண்ணியிருக்கலாம். அவ்வெண்ணம் போக்க, 'வளவ' என்று சோழர்க்குரிய என்றும் குன்ரு வளங்களைச் சுட்டி அழைத்தான் அமைச்சன்.

'அநபாயன் வழிமுதல்வன்' ஆதலின் பிற்காலத்திலும், 'மன்னுயிர் புரந்து வையம் பொதுக்கடிந்து அறத்தின் நீடும் என்னெறி' என்று வேந்தன்வாக்கால் கூறியதால் அவன்காலத் திலும் அவனது நாடாட்சியின் சிறப்பு ஒருசிறிதும் குறையா வுண்மையை ஞானதிருஷ்டியாலும், அநுபவத்தாலும் உணர்ந்த மந்திரியாகலின், உனக்குத் தீங்கு தரும் மகன் பிறவான் என்று குறிக்கவேண்டி 'நின்புதல்வன்' என்ருன். நின்புதல்வனுல் உனக்கு மேன்மையே உண்டாகும். கீழ்மை என்றும் ஏற்படாது என்றுதோற்றும் ஆற்றல் அத்தொடரில் அமைந்திருக்கின்றது.

பசுக்கன்று மாய்ந்த இடம், அம்மாய்விற்கு உரியதன்று என்று பொதுவாகக் குறிக்கவேண்டி, பிரசித்தமானதென்று அறிவிக்கும் உலகறி சுட்டுச்சொல்லாகிய 'ஆங்கு' என்றதால் சுட்டிருன். மன்னவகுமாரன் ஏறிச்சென்ற தேரோடு பல தேர்கள் உடன்சென்றன. அவற்றுள் ஒன்று இது. பல தேரிலும் அகப்படாதுவந்தது கன்று. அதிலும் ஓசையிடாது ஓடியதுமில்லை. மணியோசை பெரிதொலிக்கச்சென்றது தேர். எல்லாவற்றிலும் நெடியதேராதலின் அதன்சுமையே கன்றின் சாவிற்கு ஏதுவாயிற்று. தேரும் நெடியது. கன்றும் குறியது. தேரின் நெடுமை கீழ்வருங் கன்றைக் காண இடந்தாராது. இளங்கன்று முதுதேர்க்காலில் அகப்பட்டால் சாவாது புறப் படுமோ? என்ற கருத்தைத்தோற்ற "ஓர்மணி நெடுந்தேர்மேல் ஏறி அளவில் தேர்த்தானை சூழப் போங்கால்" என்ருன்.

அப்பசுக்கன்று, நின்புதல்வன் தேரில் அகப்படாது தப்பி ருைலும், 'அளவில்லாத தேர்த்தானை சூழ'ப் போயின இடத்தில் அது சாவாமலிருக்கமுடியாது. அதனுல் அதற்கு

மரணகாலம் வந்துதான் மாய்ந்ததென்று நன்ருகத் தோன்றும் என்ற கருத்தால், அளவில் தேர்த்தானே சூழப் போன வுண்மையைக் குறித்தான்.

தேர்கள் சூழப் போகுந்தேர் வேகமாக ஓட வழியில்லை. மெதுவாகத்தான் செல்லும். வேகமாக ஓடாமற் செல்லுந் தேர்கள் மக்களும் மாக்களும் சஞ்சரிக்கும் தெருக்களிற் போக வில்லை. அரசர் உலாவுந் தெருவில்தான் சென்றன. இராஜ வீதியில் இராஜகுமாரன் தங்குதடை ஏற்படாமல் போவதில் தடையிருக்க நியாயமில்லை. அங்கும் ஒரு தடை ஏற்படு மானல் அது திருவருட்சம்மதம் ஆகுமேயன்றி ஜீவச் செயலால் ஏற்பட்டதன்று. அதனுல் அங்குநடந்த குற்றத்திற்கு நம் இளவரசர் பொறுப்பாளியாகமாட்டார் என்று குறிக்க, 'அரசுலாந் தெரு' என்ருன் அறிவுடைய அமைச்சன்.

பசுக்கன்று வருங்கால் தேர் செல்லவில்லை. அதன்வரவு தெரிந்து தேரைச் செலுத்தவில்லை. தெருவில் அக்கன்று வருமென்று எண்ணவோ எவர்க்கும் முன் அநுபவமில்லை. வந்தபின்னும் பார்க்கவும் அதன் தலைவிதி இடங்கொடுக்க வில்லை. தேர் தன்பாட்டிற்கு இராஜவீதியில் செல்லும்போது தற்செயலாகக்கன்றேவந்து அத்தேர்க்காலில்மாட்டிக்கொண்டு மாய்ந்தது. அதற்கு அக்கன்றின் கர்மமே காரணம் அன்றி, இளங்கோ எவ்வாறு காரணராவார் என்று உணர்த்த, 'போங்கால்' என்று, 'போதல்' என்னும் வினை தேர்க்கும் 'உயிர்போகும் காலம்' என்னும் பொருள் கன்றுக்கும் பொருந்தும்படி கூறிய திறமை மந்திரிக்கே சிறப்பாய் உரியது.

1. புதல்வன் தேர்மேல் ஏறிப் போங்கால் என்றும்.

2. புதல்வன் செலுத்துங்கால் என்னுததால் தேர் போங்கால் என்றும்.

3. கன்றுக்கு உயிர்போங்காலம் என்றும் மூன்றும் அடங்கியிருக்கின்றன.

தேர்ச்சக்கிரத்தில் அகப்பட்டு இறந்தது மிகச் சிறிய கன்று. பெரிய பசு அவ்வாறு இறத்தல் இயலாது. கன்று துள்ளியோடும் இயல்புடையது. கால்கள் ஒடியுமோ? வேறு காயம் முதலியவற்ருல் துன்பம் உண்டாகுமோ? உயிர்போய் விடுமோ? என்ற பயமில்லாதது, 'இளங் கன்று பயம் அறியாது' என்ற பழமொழி என்றும் பொய்யாது. பயம் சிறிதும் இல்லாததால் அக்கன்று தேர் செல்லும்போது துள்ளிவந்து இறந்தது. அதனுல் தேரேறிச் சென்றவர் குற்றவாளியாக நியாயமில்லை என்று தோன்றும்படி, 'இளைய ஆன்கன்று' என்ருன் முதிய அமைச்சன். எருமைக்கன்று முதலியவை பசுக்கன்று துள்ளும் அளவு துள்ளமாட்டா என்பதை அறிவிக்க, 'ஆன் கன்று' என்ருன்.

கன்று துள்ளியோடினுலும் ஓடுங்கன்றின்மேல் தேர் ஓடவில்லை. தேர் செல்லும் இடத்தில் கன்று துள்ளிவந்தது, அத்தேர்க்காலினிடை அகப்பட்டு இறந்தது. அது அத்தேர்ச் சக்கிரத்தினிடையில் புகுந்ததே அன்றி, அதன் உடம்பின் மேல் தேர்ச்சக்கிரம்படச் செல்லவில்லை என்று மிக்க சொற் சாதுரியம் புலப்பட, 'தேர்க் காலிடைப் புகுந்து இறந்தது' என்ருன்.

இவ்வுண்மையைப் பசுவும் அறிந்திருக்கின்றது. அத் தாய்க்கும் தன்கன்று பிறரால் கொல்லப்படவில்லை என்று தெரியும். தெரிந்தும் பாசத்தால் தளர்கின்றது. பிறர் கொன்றதாகத் தளரவில்லை என்று உணர்த்த விரும்பிய மந்திரி அல்லாத வேறு எவரும் இங்கு இவ்வாறு சாமர்த்திய மாகப் பேசிவிடமுடியாது. எவ்வாறு? 'புகுந்து இறந்ததாக' என்பதில் 'ஆக' என்ற சொல்லை அமைத்தவாறு, புகுத்து மாய்த்ததாக என்ருலும், புகுந்து இறந்ததாக்க என்று பிறவினையாக்கினுலும் முன் விளங்கிய சாமர்த்தியம் எல்லாம் பயனற்றுப்போய்விடும்.

கன்றிறந்தால் தாய் தளர்ச்சி அடைதல் சகஜம் என்றும் அது எதிர்காலத்தில் இவ்வாறு நேராதிருக்கவேண்டி, ஒரு

முற்காப்புண்டாகவும், இதனினும் மிக்க விழிப்புடன் நம் ஆட்சி நடைபெறவும் திருவருள் இப் பசுவை இங்குக் கொண்டுவந்து இம்மணியை அடிப்பித்து, இத்தன்மையை விளைவித்தது என்றும் கூறி முடிக்கும்போது தனது பெருந் திறமையால், அரசனது முடிவிலாச் சினத்திற்கு முற்றுப் புள்ளி யிட்டவகையில், 'இத்தாய் வந்து இத்தன்மை விளைத்தது' என்றான். 'தாய்விளைத்த தன்மையே உங்கட்கு உண்டான கலக்கம். உண்மையில் நீங்கள் கலங்கும்படி யாதும் நடக்கவில்லை. தேர்க்காலிடைப் புகுந்த கன்று இறப்பது சகஜம்' என்று இலேசாக முடித்த மந்திரியின் மதியின் வன்மையே வன்மை! மந்திரிக்கழகு வரும் பொருள் உரைத்தல் ஒன்றுதானே? வந்தபொருளைச் சுந்தரமாச் சொல்லுவதும் அழகே.

இங்கு உணர்த்திய எல்லாவற்றையும் மந்திரியின் மதி வலிமையால் என்றே கொண்டுவிட்டால், இத்தெய்விக சரித்திரத்தின் பயனைப்பெற வழியில்லை. சேக்கிழார் திருவருட் செல்வர். அவர் கேவலம் ஒரு மந்திரியின் மதிவலிமையை மட்டும் மதிக்கமாட்டார். மனுச்சோழனைத் தருமதேவதையும் திருவாரூர்ப்பெருமான் திருவருளும் ஒருங்கே சோதித்த தெய்விகமே இது. 'தருமந் தன்வழிச் செல்கை கடன்' என்றது பொய்யாகாமையும், 'முன்னவனே முன்நின்றால் முடியாத பொருள்உளதோ' என்றது முழுவுண்மையாதலும் விளங்கும் நெறியில் திருவருளே சேக்கிழார் திருவாக்கில் இவ்வாறு நின்று உதவிற்று என்றுதான் நல்லோர் உணர்வர்.

முத்து. சு. மா. (தொடரும்)

#104.

பொய்யில் காட்சியோர் பொருளுரை

கடவுளைக்கண்டது எங்கு ?

புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

சென்ற திங்களின்வந்த ஞானசம்பந்தம் கடவுளைக்கண்ட உண்மையைத் திருமுறையிலிருந்து விளக்கிய கட்டுரையை ஏற்றுலவிற்று: அத்திருமுறை யாசிரியர் கடவுளைக் கண்ட இடத்தை இதில் காணலாம்.

சைவநெறியே, 'சேறைச் செந்நெறி' 'தேவதேவன் திருநெறி' 'முன்னெறி' 'சேமநெறி' 'அருணெறி' முதலிய தொடரால் உண்மை அருள் நூல்கள் உணர்த்துகின்றன.

இவ்வுயர் நெறியிற்சென்று கடவுளைக்கண்டு, காண விரும்புவார்க்குக் கருணைப் பெருக்கால் உணர்த்திய ஆசாரியர் பலரையும் முற்காலத்தார்போல இக்காலத்தார் போற்றியும் பயனடைந்தும் உய்திபெற்றிலர். மக்கள் கோயில் வழிபாடு முதலிய சமயச்சார்பான நிகழ்ச்சிகளில் மெய்ம்மையைத் தோற்றி நிற்கின்றாரல்லர். போலிவழிபாடும் போலியொழுக்கமும் ஆக இருப்பது அறிஞரை வருத்தும் என்பதில் ஐயமில்லை.

எங்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ குரு மகா சந்நிதானம் அவர்கள் அருளாணைப்படி, உண்மையை நூல்களாலும் இதுபோன்ற வெளியீடுகளாலும் உணர்த்திவரின், சிலரேனும் உணர்ந்து நலம் உறுதல் கூடும் என்று இயன்ற அளவு புலப்பட வெளிப்படுத்துகின்றேன். அவரவர் நல்வினைக்கேற்ற அளவு விளங்கும்.

> "புண்ணியம் மேல் நோக்குவிக்கும்
> பாவம் கீழ்நூக்கும்" (தள்ளும்)

என்பது சிவாகம வாய்மையுரை.

கடவுளை மூர்த்தி, தலம், தீர்த்தங்களிற்கண்டு வழிபடுதல் இன்றியமையாததேயாகும். ஆயினும், அவற்றின் பயனாகிய உண்மையைக் காண்பதும் காணமுயல்வதும் அதனினும் இன்றியமையாதன. திருமுறை யாசிரியர் எதையும் அரை குறையாகச் செய்யும் பெற்றியரல்லர், நிறைவுற்றதாகவே அவர் செயல் இருந்தது. நமக்கும் அதையே வற்புறுத்தி னார்கள். மனம் வாக்குக் காயம் மூன்றாலும் கடவுளை வழிபடல்வேண்டும். மனத்தின் நினைப்பும் வாக்கின் பாட்டும் காயத்தின் வணக்கமும் பூரணமாக இருத்தல்வேண்டும். இவ்வுண்மையை மேற்கொள்ளாதவர் வழிபாட்டின் முழுப் பயனை அடைவது அரிது.

'**சித்தமாரத்** திருவடியே நினைந்து உள்கி எழுவார் உள்ளம் ஏயவன்' என்றார் நெஞ்சத்தின் நினைவை, இதனால் நினைக்கும் வினையை அரைகுறையாச் செய்யாமல் ஆர - நிறையச்செய்தல் வேண்டுமென்றதறிக.

'**வாய்ஆரத்** தன்அடியே பாடுந்தொண்டர் இனத்தகத் தான்' என்றதிலும் '**நாவார** நம்பனையே பாடப்பெற்றோம்' என்றதிலும் வாக்கின் செயலின் முழுமை - நிறைவு உணர்த் தப்பட்டது.

'**தலையாரக்** கும்பிட்டுக் கூத்தும் ஆடிச் சங்கரா சயபோற்றி போற்றியென்றும்... அலறாநில்' என்று காயத்தின் பூரண நமஸ்கார இருத்தியம் வற்புறுத்தப்பட்டது.

திருவிசைப்பாவில், 'அன்றுமுதல் இன்றுவரை **கையாரத்** தொழுது அருவி **கண்ணாரச்** சொரிந்தாலும் செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே' என்று உருகிப் பாடி யருளினார்.

கடவுளைக்காண விரும்புவோர்க்கு இத்தகைய திரிகரண பூரணயாகம் அத்தியாவசியமானது. அவர்க்கே கடவுள் இருக்குமிடம் எளிதில் விளங்கும். 'நாடோறும் நவின்று ஏத்தாய் நன்மை ஆமே' என்றார் நம் அப்பர், எல்லாப்

பிறப்பும் பிறந்திளைத்த மாணிக்க வாசகர் 'பரம்பரனைப் பணியாதே எத்தனையோ காலம் எல்லாம் பாழுக்கிறைத்தேன்' என்று வருந்தினார். 'அழகாய கழலான் அடிநாளும் கழலாதே விடல் இன்றித் தொழலார் அவர்நாளும் துயரின்றித் தொழுவாரே' என்றருளினார் திருஞான சம்பந்தர். 'நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத்து உன்னைப், பேயாய்த் திரிந்து எய்த்தேன், பெறலாகா அருள் பெற்றேன்' என்றருளிய சுந்தரப் பெருமாளும், 'நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லை என்போர்க்கு இனன் ஆகிலியர் என்ற புலவரும், "உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்தலகையா வைக்கப்படும்" என்ற திருவள்ளுவரும் வெளிப்படையாயும் குறிப்பாயும் கடவுளை வணங்காதவரையும் மறுப்பவரையும் வானில் உலவும் ஆற்றலின்றித் தரையில் திரியும் பேய்கள் என்று தெரிவித்த உண்மை அறிஞர்க்கு விளங்கும்.

கடவுளை வெளியே தேடிப் பொழுதுபோக்க நம்மைத் தூண்டவில்லை. உள்ளேயே தேடிக்காண வற்புறுத்தியுள்ளனர்.

திருஞானசம்பந்தர் 'ஈசனை எம்பிரானை விரும்பி வழி பட்டால் **ஆவியுள்** நீங்கலான்' (திருக்கலிக்காமூர் ௩) என்றும் 'பாவிகள் சொல்லைப் பயின்று அறியாப் பழந் தொண்டர் உள்ளுருக **ஆவியுள்** நின்று அருள்செய்யவல்ல அழகர் இடம்... வலம்புர நன்னகரே' (10) என்றும் கடவுள் நீங்காது நிற்கும் இடத்தைக் காட்டியருளினார். மாபரன் தாபரம் சங்கமங்கள் என்றிரண்டுருவின் நின்றும் பூசை கொள்ளும் இடத்தையும் உடன் கூறியருளிய உண்மையை மறத்தல் கூடாது.

திருநாவுக்கரசர் 'பக்தர்கள் சித்தத்துட்புக்குத் தேடிக் கண்டுகொண்டேன்' என்று திருவாரூரிற் குறித்த பொருத்தத்தினை 'அடியாருடன் நாம் இருப்பது' என்ற தியாகராசனன்றி அறிவார் எவர்? 'பத்தர்கள் சித்தத்துள்புக்குத் தேடிக் கண்டுகொண்டேன்' என்றாலும் படர்க்கையிற்கண்ட அதே காட்சியைத் தன்மையிலுங்கண்ட உண்மையைச்

சொல்லாது விட்டாரோ! 'ஒருவரும் ஈங்கு அறியாவண்ணம் என் உள்ளத்துள்ளே ஒளித்துவைத்த சிறையானைத் திரு நாகேச்சுரத்துளானைத்' தேடிக் கண்டுகொண்டேன் - திரு மாலொடு **நான்முகனும்** தேடித் தேடொணுத் தேவனை **என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்** என்ற திருவங்க மாலை முடிவில், முடிவை, மொழிவேந்தர் மொழிந்தருளினர். பின்னும், உள்ளத் திருக்குறுந்தொகையைக் கற்றல் நன்று.

'என்னுளே உயிர்ப்பாய்ப் புறம் போந்துபுக்கு
என்னுள்ளே நிற்கும் இன்னம்பர் ஈசனே'

"**ஊனில் ஆவி உயிர்க்கும்** பொழுதெலாம்
நானிலாவி யிருப்பன் என்நாதனை"

என்ற வாய்மையை வாகீசரை வணங்கினலன்றி அறிதல் அரிது, அரிது, அரிது, ஊனினுள் உயிரைவாட்டி உணர்வி ஞர்க்கு எளியர், ஞானத்தார் பத்தர் நெஞ்சுள் தேனும் இன்னமுதும் ஆனர்.

வெள்ளெருக் கரவம் விரவுஞ் சடைப்
புள்ளிருக்கு வேளூர் அரன் பொற்கழல்
உள்ளிருக்கும் உணர்ச்சியில் லாதவர்
நள்ளிருப்பர் நரகக் குழியிலே'

என்றது குறுந்தொகையாயினும் வீடு வேண்டுவார்க்கு நெடுந் தொகையன்றே? 'ஆன்மாவி னிடமதாகி உசிர்ப்பெனும் உணர்வுமுள்ளார்' என்ற ஒன்றே கடவுளைக் காட்டுமே! **சுந்தரமூர்த்திநாயனர்,** காணப் பேணுமவர்க்கு எளியானைக் 'கோலக்காவினிற் கண்டுகொண்டேன்' என்றாலும், **'மனத்து உன்னை வைத்தாய்'** 'எத்தான் மறவாதே நினைக்கின்றேன்' என முதலிற் பாடியருளியது நம் உள்ளத்தில் நிலைத்துளதே! 'போய் அகலாமைத் தன் பொன்னடிக்கு என்னைப் பொருந்த வைத்த வேயவனர்' 'அறிவே நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே' 'அறிவே உன்னை அல்லால் அறிந்து ஏத்த மாட்டேனே' 'கடியேன் காதன்மையாற் கழற்போதறியாத

என்னுள் குடியாக் கோயில்கொண் டொளிர்வார்சடை எங்குழகா" 'பொய்யாது என் உயிருட்புகுந்தாய் இன்னம் போந்தறியாய்' 'நாற்றுனத்தொருவனை **நாணயபானை**' 'ஓர்ந் தனன் ஓர்ந்தனன் உள்ளத்துள்ளே நின்ற ஒண்பொருள்' 'வன்கைபிடித்து மகிழ்ந்துளே ஆடுவன் ஆடுவன்' '**கருத்து ஆர** உற்றுளனும் ஒருவனை' 'உள்ளத்துப் பொருள்பற்றினன்' **மாணிக்கவாசகர்** 'நிச்சம் எனநெஞ்சில் மன்னியா னுகி நின்றுன்' 'உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள்நீ இருத்தி **அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பது**' என்றருளிய மெய்யநுபவத்தை அன்பிருந்து அறிந்து அநுப வித்து இன்புற விரும்பினுல் இன்றும் பெறலாம்.

'இன்பில் இனிதென்றல் இன்றுண்டேல் இன்றுண்டாம்
அன்பின் நிலேயே அது'

என்பது திருவருட் பயன். இதனை எவரும் என்றும் மறத்தல் கூடாது. வீடுபெற விரையத் தூண்டுவது இது. இக்கட்டுரை யைப் பலமுறை படித்தல் மிக்க பயன்தரும்.

இரவு பகலில்லா இன்ப வெளியூடே
விரவி விரவி நின்றுந் தீபற
விரைய விரைய நின்றுந் தீபற.

தருமைக் **குருஞான சம்பந்தர்** அத்திருமுறையாசிரியர் நெறி வழி வந்தவராதலின், அவர் கடவுளேக்கண்ட இடத்தை எத்துணை எளிதாய சொல்லால் இனிதுறக் கூறியருளினுர் பார்மின்!

'ஈசன் அடியில் இருக்கையிலே எங்கெங்கும்
ஈசனடி தேடி இளேத்தேனே - பேசரிய
பொற்பதத்தன் செங்கமலப் பொற்பாதன் தன்னுடைய
நற்பதத்தைக் காணுமுன் நான்.'

(தொடரும்)

109

அஷ்டாதசபுஜ

ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி

வைபவம்

"பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி யுண்ணும் உயர்சண்டி காளி யொளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகி என்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே."

'சத்தியாய்ச் சிவமாகி', 'ஸர்வம் சக்திமயம் ஜகத்' என்பன எல்லார் உள்ளத்தும் உள்ளூன்றத்தக்க ஒரு பெரும் வித்து. சக்தி சிவத்தோடு இரண்டற்றதாய் அங்கியில் சூடுபோல—பூவில் மணம் போலப் பொருந்தியிருப்பது. சக்தியைவிட்டுச் சக்தனும், சக்தனைவிட்டுச் சக்தியும் பிரிவதும் இல்லை; பிரித்து வணங்கப்பெறுவதும் இல்லை. 'சக்திதன் வடிவு ஏது என்னில் தடையிலா ஞானமாகும்' ஆதலால் சிவஞானமே சக்தி; ஆகவே சிற்சக்தி என வழங்குவர். சிற்சக்தி, ஆன்ம பரிபாக பேதங்களுக்கும் அவசரபேதங்களுக்கும் ஏற்பப் பல வேறுவடிவந்தாங்கி அருள்செய்கின்றார். எங்கும் பரவியுள்ள மின்சாரத்தை விளக்காகிய அறிதற் சக்தியாக—மின்னடுப்பும் யந்திரங்களுமாகிய செயலாற்றும் சக்தியாகக் காண்கிறோம் அல்லவா? அதுபோல் சிற்சக்தி, வித்தையாகிற சரஸ்வதியாக—பொருளாகிற லக்ஷ்மியாக—வெற்றியாகிற துர்க்கையாகக் காட்சி வழங்குகிறார்.

இறைவன் உலகமெல்லாம் புனருற்பவமாக வேண்டும் என்ற திருவுள்ளத்தோடு எழுந்தருளியிருக்கும்போது அவர் சக்தி வித்யாசக்தியாகிறது. உலகத்தைக்காக்கும் திருவுள்ளத்தோடு இறைவன் வீற்றிருக்க அவர் சக்தி லக்ஷ்மியாகின்றது.

அழிக்கும் திருவுள்ளத்தோடு இருக்க அவர் சக்தி துர்க்கை யாகின்றது. 'எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்' அத்தகைய லக்ஷ்மியே வெற்றியோடும் பொருளோடும் விளங்கும்போது **லக்ஷ்மி துர்க்கை** என அழைக்கப்படுகிறார். மார்க்கண்டேய புராணம் தேவி மகாத்மியத்தில் தேவியைப் பற்றி பிரம விஷ்ணு ருத்திர ஸ்வரூபையாகக் கூறப்படுகிறது. இதில் ருத்திர துர்க்கைக்குப் பத்துத் திருக்கரங்களும், லக்ஷ்மி துர்க்கைக்குப் பதினெட்டுத் திருக்கரங்களும், ஸரஸ்வதி துர்க்கைக்கு எட்டுத்திருக்கரங்களும் உள்ளனவாக அறிவிக்கப் படுகிறது.

லக்ஷ்மி துர்க்கைக்குப் பதினெட்டுக் கைகளிலும் பதினெட்டு ஆயுதங்களும் குறிக்கப்படுகின்றன. அவற்றை வலதுகை கீழ்ப்புறமிருந்து வரிசையாக இடதுகை கீழ்ப்புறம் வரையில் எண்ணிப் பார்க்க. அவை முறையே - அக்ஷமாலை, கமலம், பாணம், கத்தி, வச்சிரம், கதை, சக்ரம், திரிசூலம், பரசு, சங்கம், மணி, பாசம், சக்தி, தண்டம், கேடயம், வில், பானபாத்திரம், கமண்டலம் என்பனவாம். காமக்குரோதாதி சத்துரு நிக்ரகத்திற்கு ஏற்றபாணம் முதலிய பன்னிரண்டு ஆயுதங்களும், ஜெயத்தை அறிவிக்கும் கருவிகளாகிய பிரணவ நாதஸ்வரூபத்தைக் காட்டும் சங்கம் மணி என்பனவும், அம்மையினுடைய தவத் திருக்கோலத்தை - சாந்தஸ்வரூபத் தைக் காட்டும் அக்ஷமாலை கமண்டலம் முதலியனவும், தியானிக்கும் சித்தம் இதுபோல் மலர்ந்திருக்கும் எனக்காட்டும் கமலம் முதலியனவும் அம்மை தாங்கியிருப்பது அறிந்து இன்புறத் தக்கதாம். மேலும், எருமைத் தலையின்மேல் நிற்பது அநாதியான ஆணவமலத்தின் வலிமையடக்கியிருப் பதையும், தாமரையின்மேல் நிற்பது அனவரததியானம் செய்யும் அன்பர்களின் சகஸ்ராரத்தில் வீற்றிருப்பதையும் உணர்த்தும். அம்மை வெற்றிமகள் என்பது அஞ்ஞானத்தை வென்று ஞானம் விளங்குவதைக் காட்டுவதாம்.

நவாக்ஷரி மந்திர தியானத்தில், அம்மை 18 சாதனங் களையும் தாங்கிய 18 திருக்கரங்களோடு செம்பவளத்திருமேனி

யளாய் தாமரையாசனத்தில் வீற்றிருக்கிருள் என்று கூறப்படுகின்றது. சுரதன் என்னும் அரசன் கோலாவித்வம்சியான சத்துருவினிடமிருந்து தனது ராஜ்யத்தை மீட்டதும், எல்லாச் செல்வங்களோடும் அரசியல் செலுத்தியதும் இத்தேவி உபாசனையினலேதான் என்பது வரலாறு. ஆதலால் இந்த லக்ஷ்மிதுர்க்கையை நவாக்ஷரி மந்திரத்துடன் உபாசிப்பவர்கள் அஷ்டலக்ஷ்மி கடாக்ஷத்தை அடைகிருர்கள்; எல்லாச் சித்திகளையும் பெறுகிருர்கள்; உலகத்திற்கெல்லாம் தலைவராக ஆகிருர்கள் எனபது தேவிமாகாத்மியம்.

'யாரும் அறிவர் அகரம் சிவனென்று' என்பது திருமந்திரமாதலின் அகரம் சிவம்; ககரம் சக்தி. ககாரரூபியான சிற்சக்தியே பஞ்சகிருத்தியங்களைச்செய்கிருர். இறைவன் சக்தியைப் பிரிந்து யோகிருப்ப, தேவர்களும் அசுரர்களும் சராசரங்கள் யாவும் இணைவிழைச்சு இயற்கை கூடாது இருந்தன என்று கந்தபுராணம் சொல்கிறது. ஆகவே 'சிவம் எனும் பொருளும் ஆதி சத்தியொடு புணரின் எத்தொழிலும் வல்லதாம்' என்று அருணந்திசிவனுர் அறிவிக்கிருர். இத்தகைய பாரசக்தியின் கருணையிருந்தால் ஊமன் கவிஞனுகிருன்; வறிஞன் குபேரனுகிருன்; மந்தன் புத்திமானுகிருன்.

இத்தகைய அருமையான தேவிமூர்த்தம் தென்னாட்டில் எங்குமே இல்லை. மங்கள சாந்தஸ்வரூபத்தோடு தேவியை வழிபட இந்த மூர்த்தமே ஏற்றது. இதனைத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளத்தெண்ணி, ஸ்ரீ தருமபுரீசுவரர் ஆலயப் பிராகாரத்து வாயு மூலையில், கண்ணையுங் கருத்தையுங் கவரும் வனப்பினதாகத் திருக்கோயிலை அமைத்திருக்கிருர்கள். தேவி கம்பீரத்தோடு எழுந்தருளியிருக்கின்ருள். இத்தேவி ஆலயத்திற்கு நந்தனஸு தைமீ 13௳ (26—1—53) திங்கட்கிழமை பகல் 1-30க்குள் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

தருமபுர ஆதீனம் ஸ்ரீ தருமபுரீசுவரசுவாமி ஆலயத்தில்:



அஷ்டாதசபுஜ ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி நூதன ஆலய மகாகும்பாபிஷேக தரிசனம்.



மகாகும்பாபிஷேக யாகசாலை மண்டபம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்
அன்பர்களுடன் மகாகும்பாபிஷேகதரிசனம் செய்துகொண்டு
மடாலயத்திற்கு எழுந்தருளி வருதல்.

தருமபுர ஆதீனத்தில்

ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி நூதன ஆலய

மஹாகும்பாபிஷேகம்.

எந்தவிழா வந்தாலும் தருமபுர நகரமே தனியழகு பெற்றொளிரும்; எங்கும் தூய்மை நிலவும்; தெய்வமணம் கமழும். அந்தமுறையில் கும்பாபிஷேகத்தின்போதும் எங்கும் தூய்மைகாணப்பட்டது. யாகசாலை ஒரு தனியழகு; அருமையான வேலைப்பாடு; மின்விளக்குகளும், பலநிறக்காகிதங்களும் ஓரிடத்தைக்கண்டார் கண்களை மற்றோரிடத்திற்கு ஓடாதபடி தடுத்துநின்றன. 23-1-53 வெள்ளிக்கிழமை மாலை யாகாரம்பம். அன்று முதற்காலம். நவகுண்டபக்ஷ யாகசாலையாதலின் ஒன்பது ஆசாரியர்கள் அமர்ந்து யாகாக்னி காரியங்களை மிக அழகாகச் செய்தார்கள். யாகசாலையின் வடபால் ஆலய விமான அபிஷேகத்திற்குரிய கடஸ்தாபனம்; அதன்மேல்பால் ஸ்ரீ வித்யாமேரு யந்திரபீடத்திற்குரிய கும்பஸ்தாபனம்; ஒவ்வொன்றுக்கும் தனித்தனி ஓமாக்னி காரியங்கள்.

யாகசாலையின் நாற்புறமும் பாராயணக்காரர்களமர்ந்து இனிய ஓசையுடன் பாராயணஞ்செய்தார்கள். வேதங்களைத் தனித்தனி பாராயணஞ்செய்கின்ற கூட்டங்கள் ஓர்பால்; தேவிமான்மிய பாராயணம் ஓர்பால்; அபிராமியந்தாதி பாராயணம் ஓர்பால்; பிடில், மிருதங்கம், வேய்ங்குழல் ஆகிய இன்னிசைக் கருவிகள் மிடற்றோசையோடு ஒத்து ஒலிக்கப் பன்னிருதிருமுறைப் பாராயணமும் ஓர்பால் நிகழ்ந்தது. இவைகளோடு திருவீழிமிழலை சகோதரர்கள், செம்பொனார் கோயில் சகோதரர்கள் இவர்களின் மேளவாத்தியக் கச்சேரியும் கலந்துகொண்டது. இவ்வாறு யாகசாலை நிகழ்ச்சி நடைபெற்றது. பூர்ணாகுதி நடக்கின்றபோதெல்லாம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தரிசனத்திற்கு எழுந்தருளினார்கள். பூர்ணாகுதி தீபாராதனை, கண்டு அநுபவித்து ஆனந்தப்பட வேண்டியதொரு காட்சி, அக்காட்சி தரிசிப்போர் மனத்தை

ஒருவழிப்படுத்தி இறையுணர்வு பெறச்செய்யும். இந்த ஆராதனை சுமார் ஒருமணி நிகழும். கடைசியில் எல்லோரும் திருநீற்றுப்பிரசாதம் பெற்று மகிழ்வர். இவ்வாறு சனிக் கிழமை காலை, மாலை. ஞாயிற்றுக்கிழமை காலை, மாலை யாக காலங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

மறுநாள் திங்கட்கிழமை காலை யாகசாலை அக்னிகாரியங் கள் ஆரம்பமாயின. பாராயணங்களும் முறைப்படி நடை பெற்றன. மணி செல்லச்செல்ல மக்களும் கூட்டம் கூட்ட மாக ஆலயத்தில்வந்து கூடினர். எங்குபார்த்தாலும் கூட்டம். மணி *11-30* ஆயிற்று. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் எழுந்தருளினார்கள். பூர்ணாகுதி தீபாராதனை முறைப்படி நடைபெற்றது. கடம் எழுந்தருளச்செய்யப்பெற்று, வலமாக ஸ்ரீ தேவி ஆலயத்தை அடைந்தது. குறித்தநேரத்தில் **கும்பா பிஷேகம்** நடைபெற்றது. மூலஸ்தானமூர்த்திக்கும், ஸ்ரீவித்யா மேரு யந்திரத்திற்கும் அபிஷேகம் நடைபெற்றது. அன்பர்கள் தீபாராதனை தரிசனம்செய்து ஆனந்தம் பெற்றார்கள். துர்க்கா தேவிப் பிரபாவம் அச்சிட்ட பிரசுர வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெற்றது.

ஸ்ரீ தேவி ஆலயத்தைச் சிறந்தமுறையில் நிர்மாணித்த மேஸ்திரி ராமையாவுக்கும், தேவியின் திருவுருவத்தை மிக அழகாக அமைத்துத்தந்த கோயில்திருமாகாளம் S. வயித்திலிங்க ஸ்தபதியாருக்கும், யாகசாலை பந்தல் முதலியவைகளைத் திறம்பட அமைத்த கலியபெருமாள், மாணிக்கம் ஆகிய இருவர்க்கும், மின்விளக்குகள் அமைத்து இருளை ஓட்டி எங்கும் ஒளி நிலவச்செய்த மாயூரம் எலக்ட்ரீஷியன் பாஸ்கரனுக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் **பொற்பதக்கம்** வழங்கி ஆசீர்வதித்தார்கள்.

மாலை 5 மணிக்குச் சொற்பொழிவு சபை தொடங்கிற்று. ஆதீனப் பிரசாரகோஷ்டித் தலைவர் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் சபையைத் தொடங்கிவைத்தார்கள்.

ஓரியண்டல்ஸ்கூல் இன்ஸ்பெக்டர் பிர்மஸ்ரீ T. S பாலசுப்பிரமணியஐயர் அவர்கள் "தேவிமான்மியம்" என்பதுபற்றி ஓர் அருமையான சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அவர்கள் பேச்சு ஒவ்வொருவர் உள்ளத்திலும் "உடுக்கும் புவனம் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியம்" என்ற பாடற்பகுதியின் பொருளைச் சித்திக்கச்செய்தது. அடுத்து ஓரே சங்கீதப் பிரவாகம். ஆதீன இசைக்கல்லூரி ஆசிரியர், சங்கீதபூஷணம், திரு. P. சுவாமிநாத முதலியார் இன்னிசையரங்கு சுமார் மூன்றுமணிநேரம் நடந்தது. இதுபோலவே தேவியின்முன்பு மேளவாத்தியக்கச்சேரியும். அன்று தேவிக்குச் சந்தனக்காப்பு அலங்காரம், அன்றைய அலங்காரம் ஒரு தனியழகு. நவமுக அர்ச்சனை நடைபெற்றது. தீபாராதனைக்கு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளித் தரிசனம்செய்தார்கள். அன்றுமுதல் நாடோறும் மக்கள் கூட்டம் கூட்டமாகவந்து நல்லன எல்லாம் தரும் நாயகியைத் தரிசனம் செய்து செல்கின்றார்கள்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை இரவு நவமுகார்ச்சனை நடைபெற்றது. தேவி தனக்கெனப்புதிதாகத் தயாரிக்கப்பெற்ற வெள்ளிக் கவசம் அணிந்துகொண்டு வெகு கம்பீரமாகக் காட்சியளித்தாள். அன்றையவழக்கம்போல் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரனைப் பணிந்துவந்து, தேவிதரிசனத்திற்கும் எழுந்தருளினார்கள்.

அடுத்தநாள் பௌர்ணிமை. தேவிக்கு உகந்தநாள். சன்னதியில் சோடசாக்ஷரி மகாமந்திர புரச்சர்யா ஹோமம் நடைபெற்றது.

30—1—53 அன்று தைமாத வெள்ளிக்கிழமையாதலின் அன்றும் விசேஷ வழிபாடு. **ஏகதின லக்ஷார்ச்சனை** நடைபெற்றது. காலைமுதல் மாலைவரை அர்ச்சனை. இரவு சந்தனக்காப்பு அலங்காரம்; மாலை ஐந்துமணிக்கு ஆலயத்தில்

சொற்பொழிவு தொடங்கிற்று. அன்று சர்வோதய தினமாதலின் தமிழ்மணி, திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை அவர்கள் 'சர்வோதயம்' என்ற தலைப்பில் ஓர் அரியசொற்பொழிவுநிகழ்த்தினர்கள். ஆதீனக் கல்லூரித் துணைத்தலைவர், வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் தேவிபாகவதத்தின் தத்துவார்த்தங்களை விளக்கிப் பேசினுர்கள். இரவு 7மணிக்கு இசை நிகழ்ச்சி. ஆதீன இசைக்கல்லூரி ஆசிரியர்கள், திரு. T. S. சம்பந்தம் பிள்ளை அவர்கள் பிடில், திரு. R. விசுவநாத அய்யர் அவர்கள் மிருதங்கம் ஆகிய துணைக்கருவிகளின் துணை கொண்டு திருச்சி, திரு. K. C. தியாகராசன் அவர்கள் இசை வெள்ளத்தில்–தேவியின் திருவருள் விலாசத்தில் அனைவரையும் திளைக்கச்செய்தார்கள். தேவியின் அன்றைய விசேஷ வழிபாட்டிற்கென திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகளவர்கள் மாலை 6 மணிக்கு எழுந்தருளினர்கள். இரு மகாசந்நிதானங்களும் நெடுநேரம் அளவளாவி, திருமஞ்சனம் முதலியன முடித்துக்கொண்டு தேவிதரிசனத்திற்கு எழுந்தருளினர்கள். திருவாவடுதுறை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் தேவிக்குப் பொன்னுடைசாத்தி ஆனந்தித்தார்கள். ஆராதனை நடந்தது. அன்றைய அலங்கார ஆராதனை அன்பர்களுக்கு ஆனந்தம் அளித்தது. அனைவர்களும் தரிசனஞ்செய்து இன்புற்றனர்கள்.

தஞ்சைஜில்லாகலெக்டர் திரு. T.K. பழனியப்பன் M.A., I. A. S. அவர்களும் அன்றுவிஜயமாகி வழிபாடுசெய்தார்கள். ஆதீன நூல்நிலையம் முதலியவற்றையும் பார்வையிட்டார்கள்.

மறுநாள் முதல் லக்ஷார்ச்சனை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. காலையில் இரண்டு மணிநேரம் தேவிமான்மிய பாராயணமும்நாடோறும்தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

6—2—53 தைமாதக் கடைவெள்ளி யன்றும் ஏகதின லக்ஷார்ச்சனை நடைபெற்றது.

117

தருமையாதீன ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள்

வைத்தீசுவரன்கோயிலில் அனுதைவிடுதி தொடக்கவிழாவில்

சென்னைராஜ்ய அறநிலைய பாதுகாப்பு மந்திரி

கனம் K. வேங்கடசாமிநாயுடு B.A., B.L., அவர்களுக்கு

வழங்கிய வாழ்த்து.

நம்முடைய நாடு என்றுமே கடவுள் நெறியிலே நின்று கடவுள்நெறி பரப்பிவந்த ஞானதான கர்மபூமி. இதில் தோன்றிய சமயாசாரியர்கள் எல்லோரும் தெய்வநெறியிலே - அன்புநெறியிலே நின்று சமயம் பரப்பினுர்கள். அவ்வழியிலே நாட்டுத்தொண்டும் செய்து வந்திருக்கிருர்கள். ஆன்ம சுதந்திரம் வேறு நாட்டு சுதந்திரம் வேறு என்ற பிரிப்பில்லாத ஒன்றுபட்ட சுதந்திரத்தை நிலைநாட்டி வந்தார்கள். இவ் வழியைப்பின்பற்றியே பின்வந்த பெரியார்கள் பலரும் அவ்வப் பொழுதும் கடவுள்நெறியும் அரசியல்நெறியும் பிணக்கப் பட்ட வழியிலே நின்று சமய அரசியல் ஞானத்தை மக்களுக்கு அறிவுறுத்தி வந்திருக்கிருர்கள். நம்முடைய தலைமுறையிலே நாம்கண்ட மகாத்மா காந்தி அடிகளும் அதற்கு இலக்கியமாக வாழ்ந்து விளங்கி விடுதலைப் போராட்டமுன்னணி வீரராக — சேனுபதியாக, நின்று தேச வீரர்கள் பலரையும் தயார்செய்து நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கி வழங்கினுர்கள். தன்னுடைய இறுதிக் காலம்வரை கடவுள்நெறியில் நின்று கடவுட் கொள்கைதான் நமக்கு எல்லாவித வெற்றியையும் அளிக்க வல்லது என்று வழிவகுத்துக்காட்டிச் சென்ருர்கள்.

இதனைப் பின்பற்றிவந்த வீரப்பெருமக்களுள் தாங்களும், தெய்வநெறியே தேசியநெறி என்பதை எடுத்து விளக்கி வருகிறீர்கள் என்பதறிந்து மகிழ்கின்ருேம். தெய்வம் இன்றேல் உலகம் இல்லை என்பதில் தங்களுக்கு அழுத்தமான பக்தி இருப்பதையும்கண்டு உவகை கொள்கிருேம். இது தங்களுக்குக் கருவிலே வாய்த்த திரு. தாங்கள் செய்து வந்திருக்கும் தேசத் தொண்டுகள் பல. தெய்வநெறித்

தொண்டிலே சிறந்ததாகத் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் தலைசிறந்த தொடர்புகொண்டு வேங்கடேசப் பெருமாளின் அருள்பெற்று, மக்கள்பணியாகவும் தெய்வப் பணியாகவும் அறிவுப்பணியாகவும் செய்து வந்திருக்கும் தொண்டுகள் உலகம் அறிந்து பாராட்டிப் பெருமை கொள்கிறது. அவ்விதமாகத் தெய்வநெறியிலே – தேச பக்தியிலே சிறந்த அன்பராகிய தங்களைப் பலரறிய வரவேற்று ஆசிவழங்க நமக்கு இன்று வாய்ப்புக்கிடைத்தது பற்றி மகிழ்ச்சி.

இந்த நாட்டிலே பலபல சமய பீடங்களும் அந்தந்தக் காலத்திற்கேற்பவும் மக்களைப் பண்படுத்தி தெய்வநெறி வளரத் தொண்டுசெய்து வந்திருக்கின்றன. அவ்விதமாகச் சைவ சித்தாந்த நெறியிலே இந்த ஆதீனம் சிறந்த தொண்டுகள் செய்து வருகிறதென்பது பலரும் அறிந்து பாராட்டி வருவதொன்று.

இவ்வாதீனம் நீண்டகாலமாகவே பல துறைகளிலும் ஞானவீரர்களைத் தயாரித்து இந்நாடு பூராவும் தெய்வமணம் கமழத் தொண்டுசெய்து வந்திருக்கிறது என்பதற்குச் சரித்திரம் சான்றுபகரும். அவ்வழியிலே நம்முடைய பெரியோர்கள், முன்னோர்கள், அடிச்சுவட்டைப் பின்பற்றி நாமும் நம்மால் இயன்றதைச் செய்து வருகின்றோம். கொஞ்சமாகச் செய்தாலும் நிறைவுள்ளதாகச் செய்யவேண்டும் என்பது நம்முடைய கொள்கை. அவ்வழியிலே இந்த ஆதீனமும் ஞானதானச் செயல்களாக நாடுபூராவும் பணியாற்றிவரச் சமயப்பிரசாரக் கோஷ்டிகளமைத்தும், சமயபோதகர்கள், ஆசிரியர்களுக்குக் குறுகியகால சமய வகுப்புகள் வைத்துநடத்தியும் மகாநாடுகள் கூட்டியும், அவ்வப்பொழுதும் சமயக்கூட்டங்களில் கலந்தும் தொண்டாற்றிவருகின்றது. ஐந்தாண்டுத் திட்டத்திலேஉண்டி உடை உறையுள் முதலியன எல்லாம் தந்து ஓதுவார்கள், குருக்கள்கள் பயிற்சிநிலையங்கள்வைத்து நடத்திவருகின்றது. ஆதீனத் திருக்கோயில்களில் திருமுறை ஓதுவார்களைக் கொண்டு பள்ளிக்கூட மாணவர்களுக்குத் திருமுறைப்பயிற்சி அளித்துவருகின்றது. அதில் மாணவர்கள் வந்துபயில

ஊக்கமளிப்பதாகப் பரிசுத்திட்டங்களும், உபகாரச் சம்பளங்களும், படிப்பு உபகரணங்களும் வழங்கிவருகின்றது. சமய சாஸ்திர இலக்கிய பௌதிக நூல்கள் — திருவாசகம், மெய்கண்ட சாஸ்திரம், திருக்குறள் — உரைவளம் வெளியீடுகள், அணுவில் தாண்டவம் முதலிய பலநூல்கள் அச்சிட்டு இலவசமாகவும், குறைந்தவிலைப் பதிப்புக்களாகவும் வெளியிட்டு வழங்கிவருகிறது. இவ்விதமாக இதுவரை 284 வெளியீடுகள் வெளிவந்திருக்கின்றன. பாடல்பெற்ற தலப் பெருமைகள் அவ்வத்தலத்திலும் வெளியிடங்களிலும் தெரிய ஒவ்வொருமாதமும் வரிசையாக அவ்வத்தலப் பதிகங்களை அச்சிட்டு ஆங்காங்கும் சென்று பெருமானை வழிபட்டு, வெளியிட்டு வழங்கிவருகின்றது. ஆதீன மடாலயத்திலே சிறந்த நூல்நிலையம் ஒன்று அமைத்தும் அவ்விதமாகப் பல ஆதீன தேவஸ்தானங்களிலும் நூல்நிலையங்கள் அமைத்தும் பக்தி நூல்களைச் சேமித்துவைத்து மக்களுக்குப் படிக்க வசதி செய்திருக்கிறது. வெளிகளில் இவ்விதமாக வைக்கப்படும் நூல் நிலையங்களுக்கும் புத்தகங்கள் வழங்கியும் ஊக்கமளித்து வருகிறது.

மொழியறிவு மொழி வளர்ச்சிக்காகவும் உயர்நிலை ஆரம்பபாடசாலை, கீழ்த்திசை உயர்நிலைப் பள்ளிக்கூடம், தமிழ் வித்துவான் சமஸ்கிருத சிரோமணிப் பகுதிகளைக் கொண்டுள்ள கீழ்த்திசைக்கல்லூரி இவைகளை அமைத்து நடத்திவருகின்றது. வெளிகளில் உயர்நிலைப் பள்ளிகளில், கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு உபகாரச்சம்பளம், பரிசுத் திட்டங்கள் அமைத்து வழங்கிவருகின்றது. நம் நாட்டுத் தெய்வ இசைஞானம் நல்லமுறையிலே பரவ இசைப் பள்ளி அமைத்து வாய்ப்பாட்டு, கருவிசங்கீதமாக பிடில், மிருதங்கம் முதலியன போதித்து வருகிறது. இவ்வாதீன பிரதிஷ்டாபக குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவவதாரம் செய்த ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள ஹிந்து உயர்நிலைப்பள்ளிக்கூட விஸ்தரிப்புக்கு நிதி உதவி அளித்தும், காஞ்சிபுரம் சோமசுந்தரகன்யா குருகுலம் போன்ற கல்வி நிலையங்களுக்கும் கீழ மூங்கிலடி காந்தி ஆஸ்ரமம், வேதாரண்யம் கஸ்தூரிபா கன்யா குருகுலம் முதலிய பல

ஸ்தாபனங்களுக்கும் நிதி வழங்கி ஆக்கம் அளித்து வருகிறது. உடல் நலப்பணிகளாக மாயூரம் நகரில் பெண்கள் குழந்தைகள் மருத்துவசாலை கட்டிக்கொடுத்தும், தஞ்சாவூர் சிங்கிப்பட்டி மகாத்மாகாந்தி ஞாபகார்த்த க்ஷயரோக ஆஸ்பத்திரி, சிறுவந்தாடு ஓமாந்தூர் ராமசாமிரெட்டியார் ஆஸ்பத்திரி இவைகள் போன்றவைகளில் வார்டுகள் கட்டிக்கொடுத்தும் உதவி வருகின்றது. க்ஷயரோகம், குஷ்டரோகம் முதலிய கொடிய நோய்கள் நிவாரண சங்கங்களுக்கும், மக்கள் புயலாலும் பூகம்பங்களாலும் வெள்ளங்களாலும் நாட்டுப் பிரிவினையாலும் யுத்தங்களாலும் துன்புற்றபோதெல்லாம் நிதி உதவிகள் அளித்தும் வருகிறது.

ஹரிஜன சேவையாக ஆலயப் பிரவேசச் சட்டம் வருமுன்னதாகவே ஆதீன ஆலயங்களையெல்லாம் திறந்துவிட்டுத் தெய்வநெறியிலே அந்த மக்களும் பயிற்சிபெற வசதி செய்திருக்கிறது. ஹரிஜன மாணவர்கள் கல்வியில் ஊக்கம் பெற உபகாரச் சம்பளம் ஆடைகள் முதலியன அளித்து வருகிறது. ஆதீன ஆரம்பப்பாடசாலையில் பயிலும் ஹரிஜன மாணவர்களுக்கு நண்பகல் உணவு அளித்துவருகிறது.

தெய்வப்பணிகள் சிறக்க ஆதீனசம்பந்தப்பட்ட எல்லா ஆலயங்களையும் நல்லமுறையில் பரிபாலித்துச் சிறப்பாக நடத்திவருவதாகவும் எல்லோரும் பாராட்டிவருகிறார்கள். இந்த நிலையிலே இந்தச் சிறுதொண்டாகிய அனாதைக் குழந்தைகள் விடுதி ஒன்றும் இப்பொழுது தொடங்கியுள்ளோம்.

நம்பன் பணியிலும் மக்கட்பணியிலும் சிறந்த தங்களிடம் தற்பெருமை பற்றிச் சொல்லிக்கொள்வதல்ல இவை. கருத்தொற்றுமை நிலவியிருப்பதைக்காட்டவே இவ்வளவும் சொல்லும்படியாயிற்று. இவ்விதமாகக் கருத்தொத்த இருவர் கூடும் காலத்தில் குசலப் பிரச்னமாக இதைத்தானே செய்ய முடியும். இவ்விதமாக தெய்வத் தொண்டிலே – மக்கள் தொண்டிலே – நாட்டுத் தொண்டிலே சிறந்துவிளங்கும் தங்களுக்கு எல்லாம்வல்ல சொக்கலிங்கப்பெருமான் நீண்ட ஆயுளையும், நோயற்ற வாழ்வையும், எல்லா நலன்களையும் அளித்துக் காப்பாராக.

121

ADDRESS OF WELCOME

Presented on behalf of

Velur Sri Vaithianathaswamy Devasthanam, Vaithiswarankoil.

It gives us great pleasure to welcome you to the important Devasthanam under this Adhinam management. This is one of the most famous pilgrim centres in the South. You have been for several years in one or other capacity closely connected with the administration of the affairs of a very great institution, Sri Tirumalai, Tirupathi Devasthanams and every-body knows, what you have done there is a monumental achievement. In the face of that, for us to say here what we are doing or what we propose to do would not be a comparison at all. But our desire is great and though we cannot do anything on a very large scale, we may say, our determination is to see what we attempt to do is well done. It is our firm belief and it was the belief of our predecessor also, that without the sacrifice of fundamentals of religion and philosophy, there are many things that could be done which would accord with the time-spirit and which would be of immense use in not merely raising the ethical standard, but intensifying faith in temple worship.

Our immediate predecessor and in his footsteps ourselves have directed our energies towards the fulfilment of several such activities, besides trying to achieve and maintain a certain standard of efficiency in the day-to-day administration of the affairs of the institutions entrusted to our care.

What the duties and functions of a trustee are, under what limitations they are to be carried out, how break

in traditions and adaptability to changing conditions are called for, and how these accord with the ideals and status of a religious head when he happens to be the Dharmakartha of a number of temples, all these are well known to you.

With the kind co-operation of the authorities, we are making some head way in those activities. It is only in furtherence of one such object we have now imposed on ourselves the duty of running an Orphanage. It is a new venture and we have no experience in such a mission and we propose to run at the outset on a modest scale in a cottage for a limited number of children and if we find encouragement, we hope, a large number of children can be brought up, educated and trained to become great citizens of our Mother India. It is our wish, that when they leave this institution they should go forth into the wide world with abiding faith in God and serve God and man, with missionary zeal. If that happens, surely money spent on this purpose is money well spent.

There is one other matter There is no public Rest-house here and in these days, the want of it is very keenly felt by all who want to halt and carry otu their prarathanas. The construction of a Rest-house is proposed. We request the Hon'ble Minister to lay the Foundation-Stone for the Rest-House and inagurate the Orphanage.

அனாதைக் குழந்தைகள் விடுதி தொடக்கவிழாவில்

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆசி.

மெய்யன்பர்களே!

இன்று சிறந்த நல்ல நாள். இந்த நல்லநாளிலே வடக்கே இருந்து ஆண்டவன் அருளில் திளைத்த அமைச்சர் இங்குவந்து இருக்கின்றார். அமைச்சருக்கும் ஆண்டவனுக்கும் உள்ள சம்பந்தமென்ன? என்று ஒரு வினா எழலாம், அதைத்தான் நீங்கள் கவனிக்கவேண்டும். ஒரு திருப்பதிக்கு அவர் ஏராள மான தொண்டு செய்திருக்கிறார்: தாம் நிருவாகி என்ற முறையில் நிர்வாகம் ஏற்ற காலம்முதல் ஐந்து ஆறு ஆண்டு களுக்குள் ஏராளமாக சுமார் அறுபதுலட்சம் ரூபாய்வரையில் செலவிட்டுத் தொண்டு செய்துள்ளார். அந்தக் கருணையினாலே வேங்கடேசப் பெருமான் என்ன எண்ணினார்? திரு என்றால் அழகுதானே! பதி என்றால் ஊரல்லவா! ஆகவே ஒரு திருப்பதியில் செய்தால் போதாது; எல்லாத் திருப்பதிகளிலும் செய்யவேண்டும்; அப்பொழுதுதான் நாடு உய்யும் என எண்ணினார் பெருமாள். அமைச்சர்பதவி இவரைச் சார்ந்தது. அமைச்சர் பதவி ஏற்றார்; பணி செய்கின்றார்.

பொருளிலார்க்கிவ்வுலகமில்லை யல்லவா? அந்தப் பொருள் யார் கொடுத்தது? ஆண்டவன்தானே நமக்குக் கொடுக்க வேண்டும். ஆகவே, ஆண்டவனால் கொடுக்கப்பட்ட செல்வத்தை ஆண்டவன் சன்னதியிலேயே உண்டியலில் போடுகின்றார்கள். செல்வம் குவிகின்றது. அந்த செல்வத்தை மீண்டும் மக்களுக்குக் தானே பயன் படுத்தவேண்டும். அதைத்தானே திருப்பதி செய்கிறது என்று நமது மந்திரி அவர்கள் நேற்று பேசிக் கொண்டிருந்தார்கள். அது எவ்வளவு இன்பமான வார்த்தை பாருங்கள்! அதன் குறிக்கோள் என்ன? மக்களுக்குச் செய்யும் தொண்டு மகேசனுக்குச் செய்யும் தொண்டல்லவா? ஆண்டவன் சொத்தை மக்களுக்கு நல்ல முறையுல் பயன்படுத்துகின்றோம்.

நம் தென்னாட்டுக் கோவில்களுக்கோ பொருள் பொருளாக இல்லை. நஞ்சை, புஞ்சைகளாக இருக்கின்றன, அவை ஆண்டவன் சொத்து; அதை நன்முறையில் மக்களுக்குப் பயன் படுத்தவேண்டும். அதனால்தான் இன்று வடவேங்கடப்

பெருமான் திருவருளால் அமைச்சர் இங்கு வந்துள்ளார் என்று சொன்னால் அது மிகையாகாது. ஏழைபங்காளனின் ஏழை விடுதியை அமைச்சர் இன்று இங்கு தொடங்கிவைக்கின்றார். தீராதநோய் தீர்த்தருள வல்லான் இவர்கள்மூலம் மக்களுக்கெல்லாம் இன்பத்தை அளிக்கின்றார். இன்பம் எத்தகையதாக இருக்கவேண்டும்? இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே; மக்களுக்குச் செல்வம் வேண்டும். செல்வந்தானே இன்பத்திற்குக் காரணம். எத்தகைய செல்வம் வேண்டும் என்பதை அப்பரடிகள் அறிவிக்கின்றார் பாருங்கள். 'செல்வன்கழலேத்தும் செல்வம் செல்வமே'' பாருங்கள் என்ன அருமையான வாக்கு! இத்தகைய வாக்குகளே நமக்கு உயிர்த்துணை, அவைகள்தாம் தேவார, திருவாசக, திவ்யபிரபந்தாதிகள். இவைகளைத் துணை கொண்டுதான் மக்கள் பேரின்பம் பெறவேண்டும். அப்படி இல்லாமல் ஒருவர் தம் முயற்சியினாலே எல்லாவற்றையும் பெற வேண்டும் - பெறலாம் என எண்ணுவார்களேயானால் பகலிலே கிணற்றில் விழுந்த கதை உங்களுக்கு ஞாபகத்திற்வரும்,

இன்று தொடங்க இருப்பது அனாதை விடுதி அல்ல; ஏழை விடுதி, ஏனென்றால் இறைவன் அனாதைரட்சகன், நாமெல்லாம் அவன் மக்கள். அவன் இருக்கின்றபொழுது நாமெல்லாம் எப்படி அனாதையாகமுடியும். அவன்தான் நமது உயிர்த்தந்தை. உடற்றந்தைகள் கண்ணால் காணப்படுகின்ற தாய் தந்தையர்கள். காணப்படும் பொருளெல்லாம் அழியும் தன்மையன. நிலையாமையைப்பற்றி வள்ளுவர் சொல்கின்றார்.

''உறங்குவது போலும் சாக்காடு - உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு''

இதைத் திருமூலர் இன்னும் அழகாகச் சொல்லுகின்றார். தலைவன் திண்ணையில் இருக்கின்றான். மனைவி உள்ளே ஆகாரங்களையெல்லாம் தயார்செய்து விட்டாள். உள்ளே வாருங்கள் சாப்பிடலாம் என்கிறாள். சென்றான் தலைவன். உண்டான் உணவை, அவ்வளவுதான். இடப்பக்கம் கொஞ்சம் வலிக்கின்றதே என்றான். இன்று டாக்டர் கூறுவதை அன்று திருமூலரே கண்டு அறிந்து கூறியுள்ளார் பாருங்கள். வலிகண்ட தலைவன் என்ன செய்தான்? படுத்தான். இறந்தான்.

''அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடியாரொடு மந்தணம் கொண்டார்

இடப்பக்கமே இறை நொந்தது என்றுர்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே''

நேற்று இருந்தான்; இன்று இறந்தான். யாக்கை நிலையாமை இப்படி இருக்கின்றது. இது உலகுக்குப் பெருமைதருவதாம்

''நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு''

என்பது திருக்குறள். இப்படியே அநேக சான்றுகள் இருக்கின்றன. எல்லாம் இறந்தகாலம்தான். இத்தகைய நிலையாமைக்கு அப்பாற்பட்ட ஆண்டவனே அநாதை. நாமெல்லாம் அவன் குழந்தைகள். ஆகவே இன்று தொடங்குவது அனாதை விடுதியல்ல ஏழை இல்லம்.

தெய்வ முயற்சி இருந்தால் எதையும் செய்யலாம். அவன் அருள் இன்றி நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. தெய்வ நம்பிக்கை கொண்டுதான் அமைச்சர் எல்லாப்பணிகளையும் செய்கின்றுர். இவர்கள் முயற்சியால் திருப்பதியில் திருப்பாவை வெளிவந்திருக்கின்றது. நல்ல அழகான வெளியீடு. ''ஆனந்த விகடன்'' படிக்கின்ற இக்காலத்தில் பி. ஸ்ரீ என்றுல் யாருக்குத் தெரியாமல் இருக்கும், அவர்கள் அந்த நூலை அழகான படத்தோடு பாவைக்கருத்துக்களை நன்றுக விளக்கி இருக்கின்றுர். அது ஒரு அழகு ஓவியம். கண்வழியாகக் கருத்தில் அமைத்துக்கொள்வதற்குச் சாதனமாக இருப்பது படங்களல்லவா? ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு படமாக அநேக படங்கள் அதில் அடங்கி உள்ளன. பார்க்க ஆனந்தம்! படிக்க ஆனந்தம்! நூலைத் தொட்டாலே ஆனந்தம்! இத்தகைய வெளியீட்டை உலகிற்கு உபகரிப்பது பெரும்பணி அல்லவா?

அன்பர்களே! ஏதோ அன்பின் பெருக்கினுல் இங்கு வந்தோம். அன்பு அதிகரிக்க அதிகரிக்க அது பேச்சாக எழுந்தது. ஏதோ சில பேசினேம், இன்னும் அதிகமாகப் பேசிக்கொண்டே போனுல் காலங் கடந்துவிடும். ஆகவே இத்துடன் நிறுத்திக்கொள்கிறேம். இப்பொழுது அமைச்சர் அவர்கட்கு வாழ்த்துரைகள் வாசிக்கப்படும். அமைதியுடன் இருந்து கேட்டு இன்புறுவீர்களாக. அமைச்சர் அவர்களுக்கும், இங்குவந்து சிறப்பிக்கும் சிவநேசச்செல்வர்களுக்கும் ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் திருவருளால் எல்லா நலனும் எய்துவதாக.

சென்னை அரசாங்க அறநிலைய அமைச்சர்,

கனம். ஸ்ரீ K வேங்கடசாமி நாயுடு அவர்கள்

பேசிய தொடக்கவுரை.

தருமபுர ஆதீன சந்நிதானம் அவர்களே! பெரியோர்களே!

இன்று ஒரு மஹா சுதினம், இந்த தினம் நம் நாட்டிலே புனிததினமாகச் சரித்திரத்திலே இடம் பெற்றிருக்கும் என நம்புகிறேன். ஏதனுலென்ருல் சாதாரணமாக ஏழைகள் விடுதி அநேக இடங்களில் இருக்கின்றன. ஆனுல் இதுபோல் சந்நிதானங்கள் தொடங்கி ஏனையோர்க்கும் வழிகாட்டியாக நடத்தலில் இதுவே முதல் தடவை. ஆகவே இது ஒரு புண்ணியமானதினம். இந்ததினம் சுபசூசகமாகும். சிலநாளாகச் சில பெரியோர்கள் சேர்ந்து இந்து குழந்தைகளுக்குப் பாதுகாவலாக ஆஸ்ரமங்கள் தேவைஎன்றனர். இங்கு அமர்ந்திருக்கும் சீனிவாஸ முதலியார், சச்சிதாநந்தம் பிள்ளை, கமிஷனர் சின்னையப் பிள்ளை முதலியவர்கள் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் சென்னையில் Hindu advisory committee என்ற ஒன்று ஏற்படுத்தி, இதுபோன்ற ஆஸ்ரமங்கள் எங்கும் இருக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் தெரிவித்தார்கள். நம் முதன் மந்திரி கனம் ராஜாஜி அவர்கள் இதை முழு மனதோடு வரவேற்ருர்கள். மேலும் அவர்கள் ஜில்லாவிற்கு ஒரு ஆஸ்ரமமாவது இருக்கவேண்டும் என்று கூறிஞர்கள். மஹா சந்நிதானம் சொன்னுர்கள் எல்லா மதங்களிலும் இதுபோன்று ஆஸ்ரமங்கள் இருக்கிறது என்று. எந்த தேசத்திலும், எந்த ஜாதியினரும், பசி பிணி இல்லாமல் வாழ வேண்டும். எந்தக் குழந்தையும் பசியினுல் வாடக்கூடாது; படிப்பில்லாமல் இருக்கக்கூடாது; அனுதை யென்ற பேச்சு இருக்கக்கூடாது. சுவாமி அவர்கள் சொன்னுர்கள் அனுதை ஆஸ்ரமம் என்பது எனக்குப்பிடிக்கவில்லை என்று. எல்லாம் பகவானுடைய குழந்தைகள். பகவான் உள்ள வரைக்கும் அனுதைகள் என்று யாரும் ஒத்துக்கொள்ளக்கூடாது. கடவுளின் பிரதிநிதியான ஆதீன கர்த்தர்களும் ஒத்துக்கொள்ளக்கூடாது. குழந்தைகளைப் பாதுகாப்பது

அரசாங்கத்தின் கடமை, கோயில்களின் கடமை, சந்நிதானங்களின் கடமை - எல்லாருடைய கடமையும்கூட. கிறிஸ்து முஸ்லீம் மதங்களிலும் அடிப்படைக்கருத்து அனாதை ஆஸ்ரமங்கள் ஏற்படுத்துவது; இதுபோன்ற ஆஸ்ரமங்கள் ஏராளமாக இருந்து கொண்டு வருகிறது. Christian orphange, Muslim orphange இது போன்றவைகளுக்கு முக்கிய வழிகாட்டி டாக்டர் முத்துலக்ஷிமி ரெட்டி, ஸிஸ்டர் சுப்புலக்ஷிமி அம்மாள் போன்ற பெரியோர்கள். அவர்கள் ரொம்ப கஷ்டத்துடன் வேலைசெய்து வருகின்றனர். முத்துலெக்ஷிமி ரெட்டி அனுப்பிய கடிதம் இப்பொழுது வாசிக்கப்பட்டது; அவருக்கு ஒரே ஆசை. இம்மாதிரி ஆஸ்ரமங்கள் வளரவேண்டும் என்று. சுப்புலெக்ஷிமி அம்மாள் அனாதைப் பெண்களுக்கு உதவ முயற்சி செய்து வருகிறார்கள். மாதவமேனன் மனைவி குட்டியம்மாளம்மாளும், மஞ்சுபாஷினி அம்மாளும், இந்துக் குழந்தைகளை எடுத்துக் கொள்வதற்கு ஆளில்லையே என்றெண்ணி சென்னையில் Foundling Home, Bala Mandir, ஏற்படுத்தியுள்ளார்கள். தாய் தந்தை தெரியாத குழந்தைகள் அதில் இருக்கிறார்கள். அந்தவிதமான குழந்தைகளை எல்லாம் எடுத்துக்கொண்டால் எவ்வளவோ குழந்தைகள் இருக்கின்றார்கள். அதற்குச் சாத்தியமில்லை. கொஞ்சம்பேர் வைத்து நடத்துவதே கஷ்டமாக இருக்கிறது. ஒரு பட்டினத்திலேயே முடியவில்லை யென்றால் மாகாணம் பூராவும் ஏற்படுத்துவது எப்படி சாத்தியமாகும்.

சாதாரணமாக, பஸ் ஸ்டாண்டுகளிலும், கோயில்களிலும் பிச்சை யெடுக்கிறார்கள். அது பரிதாபகரமாக இருக்கின்றது. அவர்கள் ஏன் பிச்சை யெடுக்கவேண்டும்? அவர்கள் செய்த குற்றமென்ன? இதை எப்படி நாம் பார்த்துக்கொண்டிருப்பது? இது கஷ்டமான ஸ்திதி. நம் சமூகத்திற்கும் மதத்திற்கும் குறைவுபாடு அது என்று எல்லோரும் ஒத்துக்கொண்ட விஷயம். நம் அந்தஸ்த்திற்குத் தகுந்தாற்போல் குழந்தைகளையும் திக்கற்ற பெரியோர்களையும் காப்பாற்றுவதே கடவுட் பணி. Sisters' of Little Church என்று கிறிஸ்தவ மதத்திலும் இருக்கிறது. அவர்களாலே

செய்யப்படும் உபசாரம் ஆச்சரியமாக இருக்கிறது. குழந்தைகள், ஜீவிதம்பெற சக்தியற்ற பெரியோர்கள் இவர்களைக் காப்பாற்றுவது அச்சங்கத்தின் கடமை.

நம்முடைய தேசத்திலே தர்மம் விசேஷமாக இருக்கிறது. அதற்குச் சந்தேகமில்லை. அதற்குச் சாட்சி தஞ்சை ஜில்லா. நான் ஒரு பாக்கியம் பெற்றேன் தஞ்சை ஜில்லா கோயில்களைப் பார்க்க. இங்கு உள்ள கோயில்கள் எல்லாம் விஸ்தாரமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. அது இந்தக்கோயில்களைக் கட்டியவர்களின் விஸ்தாரமான மனதைக் காட்டுவதற்கு ஆச்ரியமான ஆதாரங்கள். எங்குபார்த்தாலும் எந்த ஊர்களிலும் பெரிய கோயில்களிருக்கின்றன; சின்னவைகளாக இல்லை. அவைகள் என்ன தெரிவிக்கின்றதென்றால், ஒரு காலத்தில் நாட்டிலே சுபிட்சம் நிலவியது; அரசர்கள் மதப் பற்று, தர்மசிந்தனை, உதாரகுணமுடையவர்களாய் விளங்கினர் என்பதை எடுத்துக் காட்டுகின்றன. கோயில்களினால் பணம் நஷ்டமாகிவிடுகிறது என்று யாரும் நினைக்கக்கூடாது. கல் பகவான் சிருஷ்டித்தது. மக்கள் ஒற்றுமை, முயற்சி, உழைப்பு, ஆர்வம் இவைகளே இவ்வளவு பெரியகோயில்கள்.

பெரியோர்களே! நம் முன்னோர்கள் ஆத்மீக சக்தியைப் பெற்றிருந்திருக்கிறார்கள். அதை நாம் பின்பற்றவேண்டும். அப்படி பின்பற்றினால் நம்முடைய மதம் சமூகம் வளரும். எல்லாம் அரசாங்கமே செய்யமுடியாது. சிலவருஷங்களுக்குப் பின் அரசாங்கமே செய்யும். முக்கியமான வேலைகளைப் பெரிய ஆதீனங்கள், தேவஸ்தானங்கள் இதுபோல் செய்யவேண்டும். இதுபோன்ற ஏழை விடுதிகள் எங்கும் பரவவேண்டும். இதை எல்லோரும் ஒப்புவீர்கள்.

சில நாளாகச் சிலபெரியோர்களை நாடி ஆரம்பிக்கும்படி கேட்டோம். அநேக இடங்களில் யோசனை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் தருமபுர ஆதீனம் அநேக விஷயங்களில் வழிகாட்டியாக இருக்கிறது. அதுபோல இந்த விஷயத்திலும் வழிகாட்டியாக இருந்து வருகிறது. சுவாமிகள்

சொன்னார்கள் திருப்பதியில் அநேக வேலைகள் நடக்கின்றன என்று. அதுபோல இந்த ஆதீனத்திலும் அநேக சிறந்த வேலைகள் நடந்துவருகின்றன. ரொம்ப சந்தோஷம்.

நமக்குக் கண்போன்றிருப்பன மதக்கிரந்தங்கள். ஆசாரியர்களும், ஆழ்வாராதிகளும், நாயன்மார்களும் இயற்றிய மத கிரந்தங்கள் சிலகாலங்களுக்கு முன்னர் கிடைக்கவேயில்லை. அப்படி இருக்க திருப்பதியும் தருமையாதீனமும் செய்த வேலைகள் கண்கொடுத்தாற்போல ரொம்ப ஆச்சரியமானது. போற்றத்தக்கது. இருநூற்றுஎண்பதுக்குமேலான மதகிரந்தங்கள் வெளிவந்துள்ளன. அப்படி என்றால் அவ்வளவு ஞானவிலாசத்தை ஆதீனம் வெளியில் பரப்பியிருக்கிறார்கள் என்று அர்த்தம். இங்குஒரு நல்ல ஆச்சாபீஸ் இருக்கிறது. பல கிரந்தங்களை அச்சிட்டு எங்கும்பரப்பி ஞானத்தை வளர்க்கிறார்கள். ரொம்ப சந்தோஷம். குழந்தைகளுக்கும் மதவிஷயமான பாடசாலைகள் வேண்டும் பொதுவாக நம் நாட்டில் வயிற்றுப் பிழைப்பிற்காகப் படிப்பு என்று எண்ணி வந்தனர் (Education for Jobs). ஆனால், இப்பொழுது ஞானவிலாசத்திற்காகப் படிக்கவேண்டும்; சாப்பாட்டிற்காக அல்ல (Education for Knowledge) என்ற எண்ணம் பரவி வருகிறது.

நேற்று ஆதீனத்தில் பெரிய பாடசாலை ஒன்றைப் பார்த்தேன். அங்கு பல மாணவர்கள் மதசம்பந்தமாகவும், உலகவிஷயமாகவும் தெரிந்துகொள்கிறார்கள். திருப்பதியில் ஒரு ஓரியண்டல் காலேஜ், ஆராய்ச்சிப் பிரிவு, லைப்ரரி (Oriental College, Research Department Library) இவைகள் இருக்கின்றன. ஆதீனத்திலும் ஒரு அற்புதமான லைப்ரரியும் இருப்பதைப் பார்த்தேன். பொதுவாக எந்த பள்ளிக்கூடங்களிலும் மத சம்பந்தமான பாடங்கள் குறைவாகவே யிருக்கிறது. மத விஷயங்களை ஆராய்ச்சி செய்வதற்கு வசதிசெய்து கொடுக்கப்படவேண்டும். வெளி மதஸ்தர்களும் மதக் கல்லூரிகள் வைத்திருக்கின்றனர். அதுபோல நம்நாட்டில் நம்மதத்திற்குப் பல கல்லூரிகள் தேவை. படித்து டிகிரிவாங்கி என்னவேலை பார்ப்பது என்று

நினைக்கக்கூடாது, அநேக ஜனங்களுக்கு மதப்பற்று உண்டு; அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள்; அவர்களுக்குச் சந்தர்ப்பம் தரவேண்டும். அந்தப்பணியை ஆதீனம் ஆரம்பித்திருக்கிறது. அது முக்கியமான விஷயம்.

நமது பெரிய கோயில்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். Cleanliness is next to godliness. பகவான் பரிசுத்தமான இடத்தில் இருப்பார். ஆனால் சில காரணங்களினால் சுத்தமாக வைத்துக்கொள்ளமுடியவில்லை. ஆனால் ஆதீனக் கோயில்கள் சுத்தமாகவும் அழகாகவும் இருக்கின்றன. அதைப் பார்க்க மிக சந்தோஷம். ஆங்காங்கு ஒவ்வொரு ஓதுவார் வைத்து குழந்தைகளுக்கு மத கிரந்தங்களைச் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்துள்ளார்கள்.

இக் காலத்தில், நாட்டில் ஐந்தாண்டுத் திட்டம், (Five years' plan) பத்தாண்டுத் திட்டம் (Ten years' plan) என்று இரண்டு முறைகள் இருக்கின்றன. அதுபோல மதத்துக்கும் ஒரு ஐந்தாண்டுத் திட்டம் போட்டுக்கொள்ள வேண்டும். அவ்விதம் செய்து அரசாங்கத்திற்கு இது விஷயமாக உள்ள சிரமத்தைக் குறைக்கவேண்டும். மதப் பயிற்சிக் கல்லூரியை ஆரம்பிக்க மஹாசந்நிதானம் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். திருப்பதியில் அவ்விதம் ஒன்று ஆரம்பிக்க ஏற்பாடுகள் நடந்துவருகின்றன.

ஆத்மீக சக்தி நம் நாட்டிற்குத் தேவை. மஹாத்மா காந்தியடிகள் ஆத்மீக சக்தியின் காரணமாகத்தான் சுதந்திரம் வாங்கினர். இதே சக்தியைத்தான் இன்று தருமை ஆதீனம் வளர்க்கிறது.

இக்காலத்தில் பிரசாரம் முக்கியம். சுவறுகளிலும் தூண்களிலும் பெரிய எழுத்துக்களில் எழுதுகின்றார்கள். அதை ஒருமுறைக்குப் பத்துமுறை பார்த்தால் நம் மனத்தில் பதிந்து விடுகிறது, சினிமாவுக்குப் போகக்கூடாதென்று எண்ணுகிறார்கள். ஆனால் விளம்பரத்தைப்பலமுறைபார்க்கப் பார்க்க ஒருமுறை போகச்செய்கிறது. அதிலே ஆர்வம்

131

உண்டாகிவிடுகிறது. தருமபுர ஆதீனத்தில்தான் பிரசாரத்திற்கென கார் வைத்திருக்கிறது. அதில் பெரிய எழுத்தில் 'தருமபுர ஆதீன பிரசார வாஹனம்' என்று எழுதப்பட்டு பலமுறையும் சுற்றிவருகிறது. அதுவே பிரசாரந்தான்.

சென்னையிலே சில ஆங்கிலேயர்கள் பலநாடுகளிலிருந்து **Moral Rearmament** என்ற பெயரால் வந்திருக்கிறார்கள். அவர்கள் ஒழுக்கத்தைப்பற்றிப் பிரசாரம் செய்கிறார்கள். உலகம் இந்தியாவை ஆத்மீக சாந்திக்கு எதிர்பார்க்கிறது. இந்தியாவில் **Servant of India Society** என்றிருக்கிறது. **Servant of Religious Society** ஏற்படவேண்டும். உலக சாந்தியை வளர்த்தால் அதுவே தாய்நாட்டுச் சேவையாகும்.

இப்போது பாகவதர் பாடினார். இப்பாட்டு உலகம் எல்லாம் பரவும். எப்போதும் கேட்டுக்கொண்டிருக்கலாம். அதுபோன்ற சக்தியை எங்கும் பரப்பவேண்டும்.

இன்றைய பேச்சு ஏழைக்குழந்தைகளைப் பாதுகாத்தல். அவர்கள் காலையில் எழுந்து பிரார்த்தனைசெய்து நந்தவனத்தில் வந்து பூ பறிப்பதும், கோயில்களில் பாட்டுப்பாடுவதும் ஒரு அற்புதமான காட்சியாய் இருக்கும்.

அந்தக் குழந்தைகள் கும்பல் கும்பலாக இருந்து பாடுவது ஆனந்தமாக இருக்கும். அது கண்கொள்ளாக் காட்சி. அந்தக் காட்சியை இங்கு முதல்முதலில் காணப் போகிறோம். சுவாமி அவர்கள் சொன்னதுபோல அவர்களை அனாதை என்று எண்ணலாகாது; அவர்கள் நல்லவர்கள். இந்த முக்கியமான கருத்தைச் சுவாமிகள் சொன்னது அவர்களுடைய அன்பைக் காட்டுகிறது.

உதாரணமாக சென்ற சில தினங்களுக்குமுன் திருவெம்பாவை, திருப்பாவை கான்பிரன்ஸுக்கு (Conference) தஞ்சைக்குப் போயிருந்தேன் நம் கலெக்டர் அவர்களும் வந்திருந்தார்கள். அப்போது குழந்தைகள் பிரார்த்தனைகீதம் பாடினார்கள். எனக்குக் கேட்க ஆச்சரியமாக இருந்தது.

132

அவர்கள் Certified School குழந்தைகள் என்று எனக்குத் தெரியாது. அருகிலிருந்தவர் இவர்கள் Certified School குழந்தைகள் என்று சொன்னார்கள். எனக்குத் திருட்டுக் குழந்தைகள் என்றதும் திகில் ஏற்பட்டது. அது தவறு; அவர்களைத் திருட்டுக் குழந்தைகள் என்று நினைக்கக்கூடாது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நற்பயிற்சிகள் அவர்களை நல்லவர்களாக்கிவிட்டது. தெருவிலே பிச்சை எடுக்கும் குழந்தைகளையும் இப்பள்ளியில் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். அதுவும் ஒரு முக்கியமான விஷயம்.

தெய்வ வழிபாட்டோடு தேவகானமும் இசைந்திருப்பது நல்லதல்லவா? அதற்காக ஆதீனத்தில் Music School ஒன்று வைத்திருக்கிறார்கள். அதில் குழந்தைகள் பயிற்சிகள் பெறுகிறார்கள். அதுவும் ஒரு நல்ல காரியம்,

கோயில் திருப்பணிகளை இதுவரை நாட்டுக்கோட்டை செட்டி ஜாதியார்களும், ஆரிய வைசிய கோமுட்டி செட்டியார்களும் நன்றாகச் செய்துவந்தனர். இக்காலத்தில் ஏற்பட்ட சில சட்டங்களினால் சில கோயில்களில் விளக்குக்கூட வைக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. ஆதீனங்கள் எவ்வளவு செய்தாலும் இன்னும் மேலும் மேலும் செய்யவேண்டும் என்றுதான் கேட்போம். அவர்களும் செய்யத் தயாராகத் தான் இருக்கிறார்கள்.

இந்த நல்ல சந்தர்ப்பத்தை எனக்குக் கொடுத்ததற்காக ஆதீனப் பெரியோர்களுக்கு நன்றியுள்ளவனாக இருக்கிறேன். நம் நாட்டுக் குழந்தைகளுக்கு ஆதீனம் நல்லபணிகள் செய்யும். அதற்குச் சந்தேகம் கிடையாது. இது தவிர இன்னொரு முக்கியமான விஷயம், கோவிலுக்கு வருவோர் தங்குவதற்கு விடுதி ஒன்று வேண்டும். இது ஒரு பிரார்த்தனை ஸ்தலம். அனேக பிரார்த்தனைக்காரர்கள் இங்கு வருவார்கள். அவர்கள் தங்குவதற்கு ஒரு விடுதி ஆரம்பிப்பது ரொம்ப சந்தோஷம் அதனை அமைப்பதற்கும் எனக்குச் சந்தர்ப்பம் தந்ததற்கு மீண்டும் ஆதீனப் பெரியோர்களுக்கு நன்றி செலுத்துகிறேன்,

தருமபுர ஆதீனத்திற்கு

கனம் மந்திரி அவர்கள் விஜயம்

6—2—53 மாலை 4 மணிக்குச் சென்னை அறநிலைய இலாகாமந்திரி **கனம் ஸ்ரீ K. வேங்கடசாமிநாயுடு** அவர்கள் விஜயமாகப்போகிறார்கள் என்று ஆதீனக்கல்வி நிலைய மாணவர்களும் ஆசிரியர்களும் தயாராக இருந்தார்கள். எங்கும் நீர் தெளிக்கப்பெற்றது. தூய்மை மணம் நிலவிற்று. மணி 4 ஆயிற்று. மாணவர்கள் அனைவரும் அணிவகுத்து நின்றார்கள். நிர்வாகிகளும், மற்றும் அன்பர்களும் ஆதீனம் ஸ்ரீ தருமபுரீஸ்வரர் ஆலயத்தின் முன்பு அமைக்கப்பெற்ற பந்தலில் கூட்டமாக இருந்தார்கள். கனம் மந்திரி அவர்கள் கார் வந்து நின்றது. அரசியல் வழக்கம் போல் அரசியல் உத்தியோகஸ்தர்கள் கார்களும் ஒன்றன்பின் ஒன்றாக வந்து கொண்டிருந்தன. வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கனம் மந்திரி அவர்களுக்கு மலர் மாலை சூட்டி வரவேற்றார்கள். புகைப்படம் எடுக்கப் பெற்றது.

பிறகு கனம் மந்திரி அவர்களுக்கு ஆதீனக் கல்வி நிலையங்களின் தலைமைப் பேராசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அறிமுகம் செய்துவைக்கப்பெற்றனர். கனம் மந்திரி கலாரஸிகர்களாதலின் அவ்வப் பேராசிரியர்களோடு அவ்வத் துறைபற்றிய சில விஷயங்களைப்பற்றி உரையாடினார்கள். ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஹயர் எலிமெண்டரி ஸ்கூல் மாணவர்களும் மாணவிகளும் நடத்திக்காட்டிய அணிவகுப்பைப் பார்வையிட்டார்கள். அச்சிறுவர்களுக்குத் தின்பண்டம் வழங்கப்பெற்றது. கல்விநிலைய ஆசிரியர்களும் மாணவர்களும் கேட்டுக்கொண்டபடி கனம் மந்திரி அவர்கள் உடனிருக்க மற்றொரு புகைப்படமும் எடுக்கப்பெற்றது.

இவைகளெல்லாம் முடிந்தபிறகு கனம் மந்திரி அவர்கள் ஆதீனத் தமிழ்க் கல்லூரி, வடமொழிக் கல்லூரி, இசைக் கல்லூரிகளைப் பார்வையிட்டார்கள். ஆதீனக் கல்லூரிக்

கட்டிடத்தில் வரவேற்புக்கூட்டம் தொடங்கிற்று. மாணவர்கள் திருமுறை ஓதினர். வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரை கூறி மாணவர்களுக்குச் சில அறிவுரை வழங்குமாறு கேட்டுக் கொண்டார்கள், அதன்படி கனம் மந்திரி அவர்கள் பேசிய அறிவுரை வருமாறு:-

வித்தியார்த்திகளே ! பெரியோர்களே !

"மாணவர்களாகிய உங்களைப் பார்த்தது எனக்கு மிக சந்தோஷமாயிருக்கிறது. உலகம் மிக விரிந்தது என்பது அந்தக் காலப் பேச்சு. இப்பொழுது உலகம் சுருங்கிவிட்டது. பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ளவர்களைக் காணவும் அவர்கள் பேச்சைக் கேட்கவும் வசதியிருக்கிறது. வானவூர்தி முதலியன இன்னும் உலகத்தைச் சுருக்கிக் காட்டுகின்றன. இந்த சமயத்தில் நமது கடமைகளை நாம் மறந்துவிடக்கூடாது. மதங்கள் எத்தனையோ இருக்கின்றன. ஆனால் கடவுள் உண்டு என்று நம்புகிறவர்கள் குறைந்து வருவதைக் காண்கிறோம். கிறிஸ்தவர், மகமதியர் இவர்களெல்லாம் பிறமதத்தினர் தம் மதத்திற்குவர முயற்சி செய்கிறார்கள். மத மாறுகிறவர்களும் அதனைப் பெரிதும் மதித்துச் செல்கிறார்கள். நம்மதமோ எல்லாக் கொள்கைகளிலும் சிறந்து விளங்குகிறது என்பதை ஆஸ்திகர் அறிவர். மதச்சார்பற்ற சர்க்கார் என்றமுறையில் தனிப்பட்ட மதத்தை வளர்க்க அரசாங்கம் இடந்தரவில்லை. நமது ராஜாஜி அவர்கள் பிரதமராக இன்று இருக்கிறார்கள். வீட்டைத் தூய்மைப்படுத்திச் செம்மைப்படுத்துவதுபோல் நாட்டைச் சீர்திருத்த ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று அமைத்துள்ளார்கள். நாட்டில் வரவர ஜனசங்கியை பெருகுகிறது. உணவுப் பொருள் குறைகிறது. பொருளாதார நெருக்கடி வருகிறது. இதற்கு வழிவகை செய்ய அத்திட்டம் பயன்படும். ஆஸ்திகர்களைப் பரிகசித்தல் நம்நாட்டில் உண்டு. பிறதேசங்களைப் பாருங்கள். ஆங்காங்கும் கடவுள்வழிபாடு இருக்கிறது. அமெரிக்காவில் ஐஸன் ஹ்வர் பதவிஏற்குமுன் கடவுள் வழிபாடுசெய்தார். இங்கிலாந்தில் எலிஸபெத் கடவுள் வழிபாடாற்றிய பிறகே பதவி ஏற்றார். அவர்களை அந்நாட்டு மக்கள் பரிகஸிக்கவில்லை. ராமகிருஷ்ண பரமஹம்ஸர், அரவிந்தர்போன்ற பெரியவர்களும்

ஆசாரியர்களும் ஆழ்வார்களும் தோன்றிய நாடு நம் நாடு. விஞ்ஞானத்தில் சிறந்த நாடுகளுங்கூட ஆத்மசாந்தி, அமைதி, ஆனந்தம் எல்லாவற்றிற்கும் நம்நாட்டையே எதிர்பார்க்கிறது. அதுதான் நமது மதம். அந்தப் பெருமையை நாம் இழந்துவிடக் கூடாது. இன்றையநிலையில் மதப்பிரசாரம் தேவையாக இருக்கிறது. கிறிஸ்தவப் பாடசாலைகளில் ஒழுக்கத்தை வற்புறுத்திக் கற்பிக்கிறார்கள். ஆகவே சைவசித்தாந்தம் உலகமெல்லாம் பரவ நாம் முயற்சி செய்யவேண்டும். ஆகாயவிமானத்தில் செல்வதால் மட்டும் அமைதியை எதிர்பார்க்க முடியாது. நாம் மாணவர்களுக்குச் சமய சாத்திரங்களைக் கற்பித்து உலகமெங்கும் அனுப்பி நம் மதத்தின்பெருமையை உணரச் செய்யவேண்டும். மதக்கல்வியால் நாடு நலம்பெறும். இங்கேயிருக்கின்ற மாணவர்களாகிய உங்களைக் காணும்போது ரொம்ப மகிழ்ச்சி. மதச் சின்னங்களை அணிந்துகொண்டு அழகாக இருக்கிறீர்கள். இருள் சூழ்ந்த உலகத்தில் இறைவன் ஒளியை எங்கும்பரப்பப் போகின்றீர்கள். உங்களுக்குப் பொறுப்பு அதிகமாக இருக்கிறது. நீங்கள் இருளில் அகப்பட்டுக்கொள்ளுதல் கூடாது. மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இறைவனை நம்பி நடப்பதே நமது பழைய பண்பாடு. இந்த ஆதீனம் இத்தனை கல்வி நிலையங்களை வைத்து நடத்தி வருவது - இத்தனை மாணவர்களைவைத்துப் பரிபாலிப்பது எவ்வளவு ஆக்கவேலை. இதைப்பார்க்க எனக்குச் சந்தோஷமாயிருக்கிறது. இந்தமாதிரி எந்த இடத்திலும் இருப்பதாக எனக்கு நினைவில்லை. திருப்பதியில் பல கல்விநிலையங்கள் இருக்கின்றன. ஆனால் ஆகமப்பிரிவில் ஆசிரியர்கள் எண்ணிக்கையைவிட மாணவர்கள் எண்ணிக்கை குறைவுதான். இங்கு அதிகமாக இருக்கின்றதைப் பார்க்க ஆனந்தம் வருகிறது. ஆனால் மாணவர்கள் நாம் படிப்பது பிழைப்பிற்காக என்று கருதக்கூடாது. ஆன்மலாபம் கருதிப் படிக்கவேண்டும். தமிழ் - வடமொழி மாணவர்கள் படித்துப் பட்டம்பெற்ற பிறகு அத்தனைபேரும் ஆசிரியர்களாகத்தானே வரவேண்டும். இவ்வளவு பேருக்கும் வேலை கிடைக்குமா என்று எண்ணலாம். அவ்வாறு படித்தவர்களுக்கு வசதி செய்யவேண்டும் என்பதற்கு நாங்கள் மதத் தலைவர்களுடன் கூடி யோசிக்கப்போகிறோம். அதற்குத் திட்டம் வகுக்கப்போகிறோம். ஆகவே அந்தக்கவலை மாணவர்களுக்கு வேண்டியதில்லை. ஆகவே மாணவர்களாகிய நீங்கள் நன்றாகக் கற்று மதப்பிரசாரம் செய்து ஆஸ்திகத்தை வளர்க்கவேண்டும். கடவுள் உங்கட்கு நன்மை செய்வாராக"

ஆதீனத்துத் தொண்டர் என்ற முறையில் சென்னை முன்னாள்மேயர் திரு. S. **இராமசாமி நாயுடு** அவர்கள், கனம் மந்திரி அவர்களுடைய அரசியல் அநுபவங்களையும், தியாகத் தன்மையையும், நாட்டுக்கும் மொழிக்கும் சமயத்துக்கும் அவ்வப்போது ஆற்றிவரும் அரும்பண்பாடுகளையும், உயிர் நலப் பணியோடு உடல்நலப் பணியாகவும் செய்துவருகின்ற சேவைகளையும், காட்சிக் கெளியராய் - கடுஞ் சொல்லிலராய் எப்பொழுதும் விளங்குகின்ற எளிவந்த வாழ்க்கையினையும் பலபட எடுத்துப் பாராட்டியதோடு, ஆதீனச் சேவைகளையும் பாராட்டிப்பேசி நன்றியுரை கூறினார்கள். கடவுள் வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

பிறகு கனம் மந்திரி அவர்கள் ஆதீனப் பதிப்பகம், ஆதீனமடாலயம், ஆதீன நூல் நிலையம் ஆகியவைகளை யெல்லாம் பார்த்துக்கொண்டே பண்டாரக்கட்டிற்குச் சென்றார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுடன் சில நேரம் அளவளாவினார்கள். அப்பொழுது 'ஆதீனம் செய்துவரும் சேவை மிகப்பெரியது. பல கல்விநிலையங்கள் அமைத்திருப்பது ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. ஆதீன தேவஸ்தானங்களில் குழந்தைகள் பாடிவருவது பெரிய பிரசாரம். எல்லா வகையிலும் ஆதீனம் வழிகாட்டியாக இருக்கிறது. இன்னொரு பெரிய விஷயம் இங்கு தெரிவித்துக்கொள்ள விருப்பம். மக்களுக்குச் சமய உணர்ச்சி குன்றிவருகிறது இந்தக் காலத்தில். ஆனால் உலகநூல் எவ்வளவோ படிக்கிறார்கள் அது ஆத்மசாந்திக்குப் பயன்படாது. ஆகவே மதக்கல்வி போதிக்கும் நிலையம் ஒன்று அமைக்கவேண்டும். எல்லா மதத்தினருக்கும் சென்னையில் நிலையங்களை அமைத்துப் பிரசாரம் செய்கிறார்கள். ஆதலால் சென்னையில் ஒரு பெரிய நிலையம் உண்டாக்கவேண்டும். அது ஒரு பெரிய பணி. அதைச் சுவாமிகள்போன்ற பெரியவர்கள்தான் செய்து முடிக்கமுடியும். இந்த ஆதீனந்தான் முற்போக்காக எதனையும் செய்து வருகின்றது. அதனால்தான் அந்த விஷயம் இங்கு வந்தவுடன் ஞாபகம் வந்தது. ஐந்து ஆண்டுத் திட்டத்தில் அப்படிப்பு அமையவேண்டும். பல கிரந்தங்களை ஆதீனம்

வெளிப்படுத்தியிருக்கிறது. நல்ல பணி' என்றெல்லாம் கனம் மந்திரி அவர்கள் பாராட்டிப் பேசினார்கள். மணியும் ஏழு ஆயிற்று. வெள்ளிக்கிழமையாதலின் ஆதீனத்திலுள்ள ஸ்ரீ லக்ஷ்மி துர்க்கை வழிபாட்டிற்கும் வந்து தரிசனம் செய்தார்கள்,

திருக்கடவூர் தேவஸ்தானத்தில்:

6—2—53 இரவு 8 மணிக்கு, கனம் மந்திரி அவர்கள் திருக்கடவூர் அமிர்தகடேசுவரசுவாமி ஆலயத்திற்குச் சென்றார்கள். தேவஸ்தானக் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருக்கோபுர வாயிலிலேயே பிரசாதம் அளிக்கச்செய்து மலர்மாலை சூட்டி வரவேற்றார்கள். உள்ளே நுழைந்ததும் விநாயகர் தரிசனம், பிறகு முறையே ஏனைய மூர்த்திகளையும் தரிசனம் செய்துகொண்டு வந்து கால சம்ஹாரமூர்த்தி சந்நிதியிலும் வழிபாடு செய்துகொண்டார்கள். தேவஸ்தானத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற ஒலிபெருக்கியைத் திறந்து வைக்கவேண்டும் என்று கட்டளைசுவாமிகள் கேட்டுக்கொண்டார்கள். அதன்படியே கனம் மந்திரி அவர்கள், முதலில் தேவஸ்தான தேவாரவகுப்பு மாணவர் மாணவிகளைப் பாடச்சொன்னார்கள். அடுத்து அவ்வகுப்பு ஆசிரியரையும் பாடச்சொன்னார்கள். பாடிய பிறகு "ஒலிபெருக்கியில் முதலில் பேசத்தொடங்கியபொழுது எனக்குப் பயமாக இருந்தது. மாணவர்களும் ஆசிரியரும் அவ்விதமில்லாமல் தைரியமாகப் பாடினார்கள். பாருங்கள் இப்பொழுது குழந்தைகள் பாடினார்கள், கேட்க எவ்வளவு இன்பமாக இருந்தது. அடுத்து ஆசிரியர் பாடினார். அருமையான பாடல், இங்கு வழிபட்டால் யமபயம் இல்லை. கடவுள் அருள் இருந்தால் யமனுக்குக்கூட பயப்பட வேண்டாம், எல்லா நன்மைகளும் நமக்குக் கிடைக்கும். இத்தகைய பாடலை ஓதி இறைவனை வழிபடுவது நல்லதல்லவா. இதுவரையில் இவ்வூர் மக்கள் கோயிலுக்கு வந்து இந்த இன்பப்பாடலைக் கேட்கவேண்டியிருந்தது. இப்பொழுது

அப்படியில்லை, இவ்வொலிபெருக்கியின் மூலம் அவரவர்களும வீட்டில் இருந்தபடியே பாடலைக் கேட்கலாம், கேட்கக் கேட்கக் கடவுள்வுணர்ச்சி தானேவரும். அடுத்து நம்பிக்கை வரும். நாஸ்திகர்களும் ஆஸ்திகர்கள் ஆவார்கள், இது ஒரு பெரிய பணியல்லவா. விடியலில் மக்கள் எழும்பும்போதே குழந்தைகள் பாடல் காதில் வந்துவிழும். இப்பணியின் பயன் ரொம்ப அதிகம், இதுபோன்றபணி ஆதீன தேவஸ்தானங்கள் ஒவ்வொன்றிலும் நடைபெறுவது எனக்கு ரொம்ப ஆனந்தம் அளிக்கிறது. கோயில்கள் ரொம்ப அழகாகத் தூய்மையாக இருக்கின்றன. ஆதீனம் எல்லாவகையிலும் பிறருக்கு வழி காட்டியாகவே இருக்கின்றது' என்று பாராட்டிப் பேசினார்கள். குழந்தைகளுக்குத் தின்பண்டம் வழங்கப்பெற்றது. அதற்கு மேல் கனம் மந்திரி அவர்கள் அபிராமி அன்னையைத் தரிசனம் செய்தார்கள். அன்று தைமீ கடைவெள்ளியாத லின் விசேஷ வழிபாடு சந்தனக்காப்பு அலங்காரம் இவைகள் நடைபெற்றன.

சீகாழி தேவஸ்தானத்தில்:

ஆதீனத்தைச் சேர்ந்த சீகாழி ஸ்ரீ சட்டநாத சுவாமி தேவஸ்தானத்திற்கு 6—2—53 காலை 10 மணிக்குக் கனம் மந்திரி அவர்கள் விஜயம் செய்தார்கள். தேவஸ்தானக் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் ஆலயக் கோபுரவாயிலேயே கோயில் மரியாதையுடன் மலர்மாலைசூட்டி வரவேற்றார்கள். பிறகு ஒவ்வொரு சந்நிதியாக வழிபாடு நடைபெற்றது. பிறகு கனம் மந்திரி அவர்கள் திருஞானசம்பந்தர் ஆலயத்திற்குச் சென்று அங்குள்ள நூல்நிலையம் முதலியவற்றையும் பார்வையிட்டார்கள். தேவஸ்தான தேவாரவகுப்பு மாணவர்கள் தேவாரம் பாடக்கேட்டு கனம் மந்திரி அவர்கள் மாணவர்களைப் பாராட்டினார்கள். கட்டளை சுவாமிகளுடன் தலப் பெருமை, மூர்த்திகளின் பெருமைகளைப்பற்றி உரையாடினார்கள். மாணவர்களுக்கும் தின்பண்டம் வழங்கப்பெற்றது.

அனாதைக் குழந்தைகள் விடுதி தொடக்க விழா

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆட்சி பீடம் ஏற்ற அன்று முதல் பல அருமையான - காலத் தேவைக்கு ஏற்றதான பொது நலப்பணிகள் பலவற்றை ஆற்றிவருகின்றதை உலகம் அறிந்து அவ்வப்போதும் பாராட்டி வருகின்றது. அன்று "இன்னின்னவை செய்யவேண்டும்" என்று அவர்கள் திட்டமிட்ட பணிகளுள் அனாதை விடுதியும் ஒன்று. அப்பணி தீராத வினையெல்லாம் தீர்த்தருளும் ஸ்ரீ வயித்தியநாதப் பெருமான் திருத்தலமாகிய வைதீஸ்வரன்கோயிலில் ஸ்ரீ செல்வமுத்துக் குமாரனின் திருவருள் துணைகொண்டு 7—2—53 மாலை நிறைவேறியது. அத்துடன் தேவஸ்தான விடுதி ஒன்று அமைக்கவும் ஏற்பாடு செய்யப்பெற்றது. அனாதை விடுதியைத் தொடங்கிவைக்க சென்னை அறநிலைய இலாகா மந்திரி கனம் ஸ்ரீ K. வேங்கடசாமி நாயுடு அவர்கள் அன்புடன் இசைந்தார்கள். அழைப்பிதழ் அன்பர்கள் அனைவர்க்கும் அனுப்பப் பெற்றது. அனாதை விடுதியின் முன்புறம் பெரிய கொட்டகை அமைத்து மகர தோரணங்களும் திரைச்சீலைகளும் கட்டி அழகு செய்யப்பட்டிருந்தது. வழக்கம்போல் மின் விளக்குகளும் அழகுறுத்தின.

7—2—53 மாலை 5-மணிக்குத் திறப்புவிழா நிகழ்ச்சி நடைபெறுவதால் 4-மணி முதல் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்துகொண்டிருந்தனர். விழாவில் கலந்து கொள்ளவேண்டும் மந்திரி பேச்சைக் கேட்கவேண்டும் என்ற ஆர்வத்துடன் வந்தவர்கள் பலர். விழாப்பந்தல் அலங்காரத்தைக் காண வேண்டும். நாமும் அங்கு சற்று உட்கார்ந்து இன்பமுற வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்த மக்களும் அநேகர். 'அறநிலைய இலாகா அமைச்சரே! வருக'. 'வேங்கட்சாமி விழுமியோய் வருக'! 'ஏழை இல்லம் திறந்திட வருக'. என்ற வளைவுத்தட்டிகள் வழிப்போவார்களையும் தடை செய்து கொஞ்ச நேரம் நிற்கத்தான் செய்தன.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் ஆதீனத்திலிருந்து கட்டளைமடத்திற்கு எழுந்தருளினார்கள். தேவஸ்தான ஓதுவார் "மாசில் வீணையும் மாலை மதியமும்" என்ற திருப்பாசுரத்தை ஒலிபெருக்கியின்மூலம் அனைவர் காதிலும் விழச் செய்தார். பாடலின் பொருளும் இசையும் கேட்ட மக்களை

'அப்பர் சுவாமிகள் அன்று பெற்ற இன்பம் இப்படியிருக்குமா' என்று எண்ணுமாறு செய்தது. அடுத்து 'ஒற்றுமை சேர்வது மெய்யினையே' என்று ஆரம்பித்தார். மணி 5-¼ ஆயிற்று. திருவருட்சம்மதம் எப்படியிருக்கிறது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் கட்டளை மடத்திலிருந்து விழாப்பந்தலுக்கு எழுந்தருளி வந்து சேர்ந்தார்கள் கனம் மந்திரி அவர்கள் காரும் மாயூரத்திலிருந்து அந்தக்ஷணமே அங்கு வந்து நின்றது. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் கனம் மந்திரி அவர்களுக்கு மாலை சூட்டி வரவேற்றார்கள். முகப்பில் புகைப்படமும் எடுக்கப்பட்டது.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுடன் மந்திரி அவர்கள் ஏழை இல்லத்தைப் பார்வையிட்டார்கள். கட்டிடம் நன்றாகவும் சிக்கனமான செலவிலும் கட்டப்பட்டிருப்பதாக மந்திரி அவர்களும், சென்னை இந்து அறநிலைய கமிஷனரவர்களும் பாராட்டிப் பேசினார்கள். கட்டிடத்துக்குள் நுழைந்ததும் குத்துவிளக்கேற்றி அங்குள்ள படங்களுக்கு மலர்மாலை சூட்டினார்கள். பிறகு இருவர்களும் மேடையில் அமர்ந்தார்கள். 'வாசநலம் செய்து இமையோர்' என்ற திருப்பாடலை ஓதினார் ஓதுவார். விழா தொடக்கம். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தொடக்கத்தில் ஆசியுரையாகச் சில பேசி, கனம் மந்திரி அவர்களுக்கு வரவேற்புரைகளைப் படித்துக் கொடுக்குமாறு ஆதீன அடியார்களுக்கு ஆணையருளினார்கள். அதன்படியே தமிழ், ஆங்கிலம் என்ற இரண்டினையும் முறையே வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளும், வேளூர் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகளும் வாசித்தார்கள். அச்சிட்டவை அனைவர்க்கும் வழங்கப்பெற்றது. தேவஸ்தானம் சூப்பரின்டெண்டு திரு. A. கல்யாணசுந்தர தேசிகரவர்களால், அன்பர்கள் அனுப்பியவாழ்த்துச் செய்திகள் படிக்கப்பெற்றன.

பிறகு கனம் மந்திரி அவர்கள் சாஸ்திரப் படிப்பின் அவசியத்தை வற்புறுத்தி, ஆதீனக்கோயில்கள் நிர்வாகம், ஆதீனக் கல்வி நிலையங்கள், நூல் நிலையங்கள், மதப்பிரசாரம், குழந்தைகளுக்கு அளிக்கும் மதபோதனை எல்லாவற்றையும் பாராட்டிப் பேசித் தொடங்கிவைத்தார்கள். அடுத்து மகா சந்நிதானம் அவர்கள் ஆணைப்படி ஆதீனத்துத் தொண்டர் என்றமுறையில் சென்னை மாஜி மேயர் திரு. எஸ். இராமசாமி நாயுடு அவர்கள்.

"குருஞானப் பெருந்தகை சுவாமிகளே! பெரியோர்களே! உங்கள் அனைவருக்கும் வணக்கம். ஏழைக் குழந்தைகளின் வேதனைக்குரல் வெளிவருகிறது வீதிகளிலே. கோயில்களிலிருந்து கடைவீதிகள் வரை ஏழைக் குழந்தைகள் மிகப் பரிதாபகரமான நிலையில் காணப்படுகிறார்கள். வளமான நாடுதான், இன்று வறண்டு காணப்படுகிறது. இதை நினைக்கும்போது வருத்தம் உண்டாகிறது. ஆனால் இன்று ஏற்பட்ட இவ்விடுதி ஒருவாறு ஏழைக் குழந்தைகளுக்குத் துன்பம் போக்கி ஆதரவு அளிக்கும் என்று நினைக்கிறேன். மகா சந்நிதானம் அவர்கள் ஒரு சிறந்தகருத்தை வெளியிட்டார்கள். உலகில் அனாதை என்று யாருமே கிடையாது; எல்லோரும் இறைவன் குழந்தைகள் என்று அவர்கள் கூறியபோது உலகில் அனாதை யார் என்று எண்ணினேன். தாய் தந்தையற்றவர்களல்லவா அனாதைகள். நமக்கெல்லாம் தாய் தந்தையர்கள் இருக்கின்றார்களே. தாய்தந்தையின்றி யாரும் இருக்க மாட்டார்கள். ஒருவனுக்குத்தான் தாய்தந்தையில்லை. தாயுமிலி தந்தையிலி தான் தனியன் என்று பேசப்படுபவன் இறைவனே. அவன்தான் அனாதையாக முடியும். அவனுக்குக் கட்டப்பட்ட விடுதிகளே கோயில்கள். அவைதாம் அனாதை விடுதிகள். மிகமிகப் பெரிய ஆலயங்கள் அவை. ஆகவே இன்று தொடங்கப்பெறுவது ஏழை விடுதிதான்.

நான் ஆதீனத்தொண்டன். ஆதீனச் சேவைபுரிபவன். ஆகவே நன்றிகூறும்படி எனக்கு ஆணை. இவ்விடுதியைத் தொடங்கிவைத்த பெரியார் அமைச்சர் அவர்கள் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர்கள். பரம்பரையாகவே இவர்கள் குடும்பத்தினர் கடவுட்பணியில் ஈடுபட்டவர்கள். இவர்கள் செய்த சேவை மிகப் பெரியது. வள்ளுவர் பண்புடைமையிலே சொல்லுகிற பண்புகள் அனைத்தும் இவர்களிடத்தில் அமைந்துள்ளன."

என்றெல்லாம் பாராட்டி நன்றிகூறினார்கள். திருவீழிமிழலை சகோதரர்கள் மேளவாத்தியத்துடன் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களுடன் கனம் மந்திரி அவர்கள் தேவஸ்தானவிடுதி கட்டும் இடத்திற்கு அழைத்துச் செல்லப் பெற்றார்கள். மந்திரி அவர்களைக்கொண்டு அஸ்திவாரக்கல் வைக்கப்பெற்றது. இவையெல்லாம் முடிந்த பிறகு மந்திரி அவர்கள் ஆலயத்திற்குச் சென்றார்கள். வழிபாடு நடைபெற்றது.

142

வாழ்த்துச் செய்திகள்

திருவண்ணாமலை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகளவர்கள்

குன்றக்குடி.

ஏழை பங்காளன் வைத்தியநாதனுடைய திருக்கோயில் சார்பாக அநாதைமக்கள் இல்லம் தொடங்கப்பெறுவது குறித்து அளவற்ற மகிழ்ச்சி. ஆதரவற்றவர்களை ஆதரித்து, அரவணைத்துக் காத்து வளர்க்கவேண்டியது ஆண்டவன்தானே! நிலையம் தோன்றுவதற்கு அருள்பாலித்த தருமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களுக்குத் தமிழகம் என்றும் கடப்பாடுடையது. விழாவில் கலந்துகொள்ளும் அறநிலையப் பாதுகாப்புக்கழக அமைச்சர் அவர்களுக்கு நமது வாழ்த்து.

Sri. C. SUBRAMANIAM,
Minister for Finance, Madras.

* * Doubtless it is that the usefulness of the Adhinam will be much appreciated by the opening of such an Orphanage for those who are badly in need of it. I hope and trust that the Adhinam will continue to maintain its high traditions. I wish the function all success.

Dr. U. KRISHNA RAU,
Minister for Industries, Labour and Motor Transport. Madras.

* * He wishes the function all success.

திரு. K. ராஜாராம் அவர்கள் M.L.A.,
சென்னை.

தருமபுர ஆதீனம் சம்பந்தப்பட்ட தேவஸ்தானங்களின் சார்பாக ஹிந்து அனாதாச்ரமம் ஆரம்பிப்பது கேட்டு மிக்க

மகிழ்ச்சியடைகின்றேன். தேவஸ்தானங்கள், மடங்கள்போன்ற மதஸ்தாபனங்கள் சமூக அபிவிருத்தியில் எவ்விதமாக உன்னத சேவைசெய்ய முடியும் என்பதைத் தாங்கள் செய்து வழிகாட்டுவதற்காக ஒரு சமூக ஊழியனென்ற முறையில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதில் மிக்க முயற்சி எடுத்துக்கொண்ட தஞ்சை மத தர்மபரிபாலன சபை டிபுடி கமிஷனர் மண்ணுடிநாயர் அவர்களுடைய முயற்சியும் பாராட்டத்தக்கதாகும். அநாதாச்ரமம் சிறப்புற நடைபெற என் ஆசி உரித்தாகுக.

Sri M. BHAKTAVATSALAM,

50, Santhome High Road, Madras-4.

Thanks to the Dharmapuram Adhinam for the invitation to the Inauguration of the Devasthanams' Hindu Orphanage. and expresses his sense of deep appreciation for the initiative taken and wishes the function every success.

AVVAI HOME AND ORPHANAGE,

Dr. S. Muthulakshmi Reddi.

* * I am indeed very happy at this good news. I pray to the Almighty that this Orphanage inaugurated by the good and the pious may grow to be useful to thousands of our orphan children and be an inspiring example to other Devasthanams to start similar Homes for Children.

Having myself experienced the deplorable conditions of thousands of our children in our land, I cannot but appreciate and glorify the selfless service of others to this most neglected humanity. Our Children are the future Nation and if they are neglected and starved - physically mentally and spiritually - how can we expect to take our ightful place among the comity of Nations.

During the regime of Sri K. Venkataswamy Naidu, the present Minister for Hindu Religious Endowments, I do hope that South India will establish an Orphanage in every District and Devasthanam so that there will be no child in our Land that will suffer from the evils of Poverty and Destitution.

Dr. C. NATHAMUNI NAIDU, M. L. C.,
Ambur.

* * Thanking you and wishing the function and the Orphanage every success.

திரு. V. V. இராமசாமி அவர்கள் M.L.A.,
'தமிழ்த் தென்றல்' ஆசிரியர், விருதுநகர்.

* * விழா எல்லா வகையாலும் சீரும் சிறப்பும் கண்டு வெற்றிபெற, பெரிதும் வாழ்த்துகின்றோம்.

Sri. T. S. AVINASHILINGAM, B. A., B. L., M. P.
Sri Ramakrishna Mission Vidyalaya,
Perianaickenpalayam.

My best wishes on the occasion of the opening of "The Dharmapuram Adhinam Devasthanams' Hindu Orphanage". I am sure this further act of the Adhinam will fill a long-felt want of the people of the district.

Wishing it all success.

திரு. O. P. ராமசாமி ரெட்டியார் அவர்கள்
வடலூர்.

* * தாங்கள் வைத்தீஸ்வரன்கோயில் தேவஸ்தானத்தின் ஆதரவில் ஓர் ஹிந்து அனாதை ஆலயம், சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர், திரு. K. வேங்கடசாமி

 1415

நாயுடு அவர்களால் இம்மாதம் 7ந்தேதி திறப்புவிழா நடத்த அழைப்பிதழ் கிடைக்கப்பெற்றதற்கு மகிழ்ச்சி அடைகிறேன். அவர் நம் அறநிலையங்களைச் செவ்வனே நடத்தவேண்டுமென்ற பக்தி உள்ளம் படைத்தவர். அவரால் திறப்புவிழா நடத்துவது போற்றற்குரியது. தவிர, நம் மாகாணத்தில் இருக்கும் ஒவ்வொரு ஜில்லாவிலேயும் குறிப்பாகத் தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஜில்லாவிலேயும் இம்மாதிரி நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டு நடத்தப்படவேண்டுமென்பது என்னுடைய அவா. அவை தங்களைப்போன்ற பெரியோர்களின் முயற்சியால் நடத்தப்படுவது போற்றற்குரியது. இம்மாதிரி முயற்சியில் மற்ற சைவ, வைணவ மடாதிபதிகளும் ஒன்றுசேர்ந்து ஒவ்வொரு ஜில்லாவிலேயும் குறைந்தது ஒரு குருகுலமும், சேவாஸ்ரமமும், ஓர் அனாதை ஆஸ்ரமமாவது ஏற்படுத்த தாங்கள் முயற்சி எடுத்துக்கொண்டு சமீபத்தில் நடத்திவைக்க கனம் அறநிலையப் பாதுகாப்பு அமைச்சரும், தாங்களும் முயற்சி எடுத்துக்கொள்வீர்களென்றும் எல்லாம்வல்ல இறைவன் தங்கள் மூலமாக இத்தொண்டைநடத்தஅருள்பாலிப்பாரென்றும்பிரார்த்திக்கிறேன்.

திரு டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள்

திருக்குற்றாலம்.

* * வைத்தீஸ்வரன்கோயிலில் அநாதைக் குழந்தைகளுக்கு ஆதீனத்து விடுதி அமைகிறது. உயர்ந்த லக்ஷியத்தோடு கூடிய தர்மம். கனம் மந்திரி K. வேங்கடசாமி நாயுடு அவர்கள் திறந்துவைக்கிறார்கள். விழா வெற்றிகரமாய் நடக்கும். தர்மம் நிலையாய் நிற்க எல்லாம்வல்ல முருகன் அருள்புரிவானாக.

Sri. V. NATESAN,

Salem.

* * With great humility, I offer my Pranamams at the lotus feet of your Holiness, and with due respect I appreciate the great love and kindness showered on me by your Holiness, in inviting me to be present at the opening of the Dharmapuram Adhinam's Devasthanam's Hindu Orphanage, at Vaithiswarankoil on 7—2—53.

I further pray that with the Blessings of your Holiness, the proposed institution may proceed from prosperity to prosperity. * *

திரு. ம. ப. பெரியசாமித்தூரன் அவர்கள்,

சென்னை.

* * அநாதைகளுக்கு ஒரு விடுதி ஏற்படுத்துவது பெரியதொரு தருமம் ஆகும். அதைத் தாங்கள் செய்ய முன்வந்திருப்பதைக் கண்டு பெரிதும் மகிழ்கிறேன். தங்களுடைய அறப்பணி இதுபோல மேன்மேலும் பெருகி வளரவும், விழா இனிது நடைபெறவும் இறைவனை வேண்டுகிறேன்.

திரு. S. நடராஜ நாடார் அவர்கள்

மதுரை.

* * தங்கள் திருப்பணிகள் எப்பொழுதும் காலத்திற்கும், மக்களது தேவைக்கும், ஏழைகளின் வாழ்விற்கும் ஒத்தவகையில் சிறப்பாக அமைந்துவிடுகின்றது. அநாதை நிலையம் தமிழ் நாட்டிற்கு மிக அவசியமான ஒரு நல்ல முயற்சி. நடமாடும் கோவில் நம்பர்க்குச் செய்யும் பணிகளே இறைவனுக்கும் உகந்த பணிகள். தங்கள் தொண்டுகள் பலதுறையிலும் மேன்மேலும் வளர அம்பலவாணன் அருள்புரிவாராக.

திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள்

சென்னை.

* * மக்கள் நலம் பொருட்டுத் தாங்கள் ஆற்றும் பணிகள் தழைப்பது கண்டு தமிழ்நாட்டார் அகமகிழ்கின்றார்கள். திறப்பாளர் அவர்களுக்கு என் அன்பின் வணக்கம் உரியது.

திரு. அ. கிருஷ்ணசாமி வாண்டையார் அவர்கள்

பூண்டி.

* * இந்து அநாதைகளின் ஆச்ரமம் ஆரம்பவிழா அழைப்புக் கடிதம் கிடைத்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் சந்நிதானத்தை நேரில் தெரிசிக்கவேண்டுமென்ற ஆவல் மிகுதி உண்டு. * *

 (47)

திரு. T. P மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் M.A., B.L., M.O.L.,

சென்னை.

** அநாதாஸ்ரமம் தொடங்குவதுபற்றிய அழைப்பு வந்தது. தருமபுரம் இந்தவகையிலும் குருபாதம் துணையாக ஒரு புதுவழியைக் காட்டுவது கண்டு தொண்டர்கள் மகிழ்கின்றேம். இதனைப்பற்றியே கனவுகண்டுவரும் கனம் மந்திரியார் இதனைத் தொடங்கிவைப்பது மிகமிகப் பொருத்தமேயாம்.

Sri. M. R. JAMBUNATHAN,

Editor, Vedas & Upanishads in Tamil,
Khar, Bombay-21.

* * This day will ever be remembered in future as the day and the glorious Act which guided the religious mutts of India and infused new life into the people. Service to the poor to the Orphan, to the forsaken is rightly recognised by your Holiness as a Divine Service to Lord Rudra the Friend of the poor, the Friend of the Orphan and the Friend of the Vagrant.

Let all Orphans irrespective of creed, caste, colour or religion be admitted in the Orphanage but provision should be made to inculcate the Dynamite spirit of Hinduism into them. Wish the function every success and pray for your Holinesse's long life to continue start and maintain more institutions to help the beloved poor of Lord Shiva.

கரந்தை தமிழ்ச் சங்கம்

தஞ்சை.

* * திருப்புள்ளிருக்குவேளூரில் தருமையாதீன தேவத்தான இந்து திக்கற்ற மாணவர் இல்லம் நிறுவ, மகாசந்நிதானமவர்கள் திருவுளங்கொண்டது யாவரும் தெரிந்து மகிழற்குரியது. திக்கற்றூர் இல்லம், திக்குற்றூர் இல்லமாகவும் திகழத் திருவருள் துணை நிற்பதாக.

148

Sri. V. RATHNAM, B. A., B. L.,
Sub-Judge, Tiruchirappalli.

* * Many of us take pride in this new venture. We are proud to note that your Holiness is devoting genuine interest in the Orphanage.

Sri. R. KANDASWAMI MOOPPANAR B. A., B. L.,
Kumbakonam.

It has given us immense pleasure to learn that by the bounteous gift an orphanage is being established at "Vaithiswarankoil" and the same is to be inaugurated by the Hon'ble Minister for the Hindu Religious Endowments and Charities.

The idea is original and it was given only to your Holiness to be the pioneer in this forum of charity as you have been in other forum.

We wish the institution inimitable fame and utility.

We pray Almighty to grant your Holiness, His choicest blessings, long life, high honour and dignity.

By the magic touch of the Hon'ble Sri. K. Venkataswami Naidu, the institution is bound to thrive well and attain a glory both for itself and its founder.

திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் B.A., L.T.,
சென்னை.

** ஆதீன தேவஸ்தானங்களின் சார்பில் இந்து அநாதைச் சிறுவர்கட்கோர் இல்லமமைக்க மகாசந்நிதானமவர்கள் முற்பட்டிருக்கும் நற்செய்தியை அழைப்பின் வாயிலாக அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். சிவநெறியும், செந்தமிழும் ஓங்குதற்கு

ஸ்ரீலஸ்ரீ அவர்கள் செய்துவரும் பேரறங்களுள் இந் நிலையத் தாபனமும் ஒன்றாகச் சேர்ந்திருப்பதைப் பெரிதும் பாராட்டு கின்றேன். தாய்தந்தையரை இழந்து தவிக்கும் இந்து சிறுவர் சிறுமியர்க்குத் தாயாகித் தந்தையுமாய்த்தாங்க மகாசந்நிதானம் முற்பட்டிருப்பது, சைவ சமுதாயத் தலைவர்கட்கும் பெருமக்கட் கும் உலகம் போற்றும் நல்வழியொன்றைக் காட்டி உபகரிப்ப தாகும். * *

திரு. க. சுப்பிரமணியன் அவர்கள் B.A.,

சென்னை.

* * நாளைத்தினம் வைத்தீசுவரன்கோயிலில், ஆதீன தேவஸ்தானங்களின் சார்பில் ஓர் ஹிந்து அனாதை விடுதி நிறுவப்பெறும் செய்தியறிந்து மிக்க களிப்படைகின்றேன். கனம் மந்திரி K. வேங்கடசாமி நாயுடு அவர்கள் இவ்விழாவை அங்குரார்ப்பணம்செய்தல் சாலப்பொருத்தமானதே. விழாக்கள் இனிது நிறைவேறவும், விடுதியின்மூலம் பல ஹிந்து ஏழை மக்கள் பயனடைந்து முன்னேற்றமடையவும், ஆதீனத்தின் பெருமை இன்னும் சிறப்புற்று விளங்கவும் செய்வித்தருளும் வண்ணம் வேளூர் ஸ்ரீ முருகப்பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

THE A. R. C. SCHOOL BOARD,

Madras.

* * It will be carrying coals to New Castle if I were to mention about the qualities of the presiding deity who is well known for his God fearing nature; orthodory and service to the motherland.

The Dharmapuram has long been playing a great part in reviving our old religious culture and building up public institutions where religious education has been given prominence and in serving humanity. This we had the opportunity of witnessing and enjoying some two year's back.

Sri. K. K. MENON, B. A., B. L.,

Executive Officer, Sri Meenakshi Sundareswarar etc.
Devasthanams, Madurai.

* * May this Orphanage, the first of its kind to be opened in pursuance of the great and noble move of our Hon'ble Minister lead the way to the other sister institutions and may it prove to be a real solace and blessing to our unfortunate orphans May it always sparkle with smile and joy.

May Sri Meenakshi and Sri Sundareswarar always shower Their choisest Blessings on this infant institution.

திரு. N. முருகேசன் அவர்கள் B.A.,

சென்னை.

** மகாசந்நிதானத்தின் ஆட்சியில் நடைபெற்றுவரும் அறப்பணிகளுள் இந்த அநாதை விடுதி தலைசிறந்ததென்று உலகம் கருதும். இவ்விடுதியில் சமயாசாரப்படிப்பும் தரப்படும் என்று நம்புகிறேன். வாழ்க! ஏழை விடுதி. விளங்குக தருமை ஆதீனம்.

Sri, M. C. DANIEL,

Municipal Commissioner, Mayuram.

* * I am glad that Adhinam is making rapid progress under the illustrious care of Your Holiness.

151

திரு. ந. சிவகுருநாதபிள்ளை அவர்கள்

தூத்துக்குடி.

** கொடிய பஞ்சத்தால் வருந்தும் அநாதைகளைக் காப்பாற்றியருளத் திருவுளம்கொண்டு, அதற்காக ஆதீன தேவஸ்தானங்களின் சார்பாக ஒரு நிறுவனம் தொடங்கப்போவது அறிந்து மிகவும் மகிழ்ச்சியுறுகின்றேன். உலகநிலை அறிந்து அதற்கு ஏற்றவகையில் அறத்தை மேற்கொள்ளும் நிலையறிந்து உலகமெல்லாம் போற்றும் என்பது துணிபு. தொடக்கவிழா நன்கு நிறைவேறவும், நிறுவனம் என்றும் நீடிநிலைபெறவும் திருவருள்பாலிக்க இறைவன் திருவடிகளை இறைஞ்சுகின்றேன். சைவமும் தமிழும் வாழத் தேவரீரவர்கள் வாழ்க! வாழ்க!!

P. CHOKKALINGA MUDALIAR, B. A.,

Tahsildar, Nagapattnam.

* * Pray God to open more Orphanages of this kind my best wishes for the success of the function.

Sri. G. VARATHARAJAN, B. A.,

Tiruchirapallai.

I am in receipt of your kind invitation and I am ever grateful. I with the function all success and I feel this is one of the benefactions of the great Swamiji.

Sri. A. MUTHIAH, M. A.,

Department of Economics,

Pachiyappa's College, Madras.

I am grateful to your Holiness for having asked me to be present on the occasion of the inauguration of the Hindu Orphanage at Vaithiswarankoil. The people of the Tamilnad are indebted to your Holiness for the

many acts of service. It is very gracious of His Holiness to take care of the well-being of the body and soul of each of the many suffering Orphans of this ancient country. It is very appropriate that the orphanages is opened by a great and pious gentleman, Sri. K. Venkatasami Naidu.

திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள்

நாகை.

** காலத்தின் தேவையை அறிந்து மகாசந்நிதானம் ஆற்றும் அறச்செயல்களை எண்ணி எண்ணி இறும்பூதெய்து கின்றேன். இத்தகைய ஆற்றல் வேறெவர்க்கும் வாய்ப்பதரிது. இது புனைந்துரையன்று உண்மையுரையேயாகும். இத்தகைய அறச்செயல்கள் பலவற்றையும் ஆற்றிக்கொண்டு ஸ்ரீ சொக்க லிங்கப்பெருமானின் மிக்க நல்லருளால் எல்லா நலன்களும் பெற்று இனிது வாழவேண்டுமென எல்லாம்வல்ல இறைவனை மனமார இறைஞ்சுகின்றேன்.

திரு. பெ. திருஞானசம்பந்தம் அவர்கள் M.A., L.T.,

திருவையாறு.

** தங்கள் அருளாட்சியின்கீழ் அமைந்துள்ள வைத்தீஸ் வரன் கோயிலில் 'தருமபுர ஆதீனம் தேவஸ்தானம் அநாதை ஆசிரமம்' தொடங்கப்படுவது மிகமிகப் பொருத்தமானதே. காலத்திற்கேற்ப மக்கள் பணியும் இறைபணியே என்ற முறை யில் இத்தகைய ஆசிரமத்தில் அனுமதிக்கப்படும் மக்கள் செந் நெறியில் செலுத்தப்படுவார்கள் என்பதை நோக்க, நம்நாட்டில் அநாதைகளாகத் திரியும் சிலருக்கேனும் உய்வுண்டாம் என்பது உறுதி. இதைப் பின்பற்றி பிற அறநிலையங்களும் இத்தகைய ஆசிரமங்கள் நிறுவக்கூடும் என்பதோடல்லாமல், பிற தேவைப் பட்ட இடங்களிலும் தருமையாதீனம் இதுபோன்ற பல ஆசிர மங்களைத் தாபித்தல்வேண்டும் என்பது எம்போல்வாரின் அவா.

"உற்றான் அளவும் பிணி அளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்"

என்னும் தெய்வப்புலவர் வாக்கைக் கடைப்பிடிக்கும் தருமை ஆதீனம் தண்ணொளிபரப்புமாறு இறைவன் அருள்புரியவேண்டு கின்றேன்.

Sri. K. SOMASUNDARAM,

Madras

* * Orphanage wish success congratulation.

Sri. S. AROGYASWAMI PILLAI,

Director, S. R. V. S. Ltd., Kumbakonam.

* * May the Orphanage inaugurated today stand as eternal Monument of Bonevalent.

Sri. S NAGARAJA IYER, B. A., B. L.,

Madras.

* * Pray long life for starting institutions as Maternity Home, Orphanage serving humanity.

வாலாஜாபாத் இந்துமத பாடசாலேயார் வாசித்தளித்த பாராட்டு நல்வாழ்த்து.

மாணவரில்லம் அமைக்கும் மாண்பு நிறை பெரியீர்! வாழி.

செந்தமிழ்த் திருநாடு எல்லாத் துறைகளிலும், பல்லாயிர ஆண்டுகளாக ஏற்றம்பெற்று விளங்குகிறது. இங்குக் கல்வியும் ஒழுக்கமும் நிரம்பிய சான்ருேர் பலர் தோன்றித் தாய்நாட்டிற் குப் பெருமை தந்ததோடு, உலகத்திற்கே உயர் பரம்பொருளைப் பற்றி விளக்கியுமுள்ளனர். முழுமுதற் சிவபரம் பொருளின் திருவருள்பற்றிய உண்மைகளைத் தெள்ளிதினுணர்ந்து உலகிற்

154

கறிவுறுத்திய சிறப்பு நம் நாட்டிற்கே உரியது. அத்தகைய அறிவுப் பணியினைச் சிறப்புவகையில் செய்துவருவது தங்களின் ஆதீனமே.

திருத்தருமபுர ஆதீனத்தின் தலைவராயமர்ந்து அருளாட்சி செலுத்திவரும் தாங்கள், பிறரெவரும் செய்யாத இம் மாணவ ரில்லத்தைத் தொடங்கத் திருவுள்ளங்கொண்டீர்கள். பொருள் வசதியில்லாத ஆதரவற்ற குழந்தைகளை, அறிவுச் செல்வங் களாக உயர்த்துதற்குத் திருவுள்ளங்கொண்ட சந்நிதானத் தைப் போற்றிப் பாராட்டுகின்றோம்.

அமைச்சர் பெருமானே! அன்புடன் வாழ்த்துகின்றோம்.

தங்கள் தூய பண்புகளை நாங்கள் நன்கு அறிவோம். தங்கள் குடிநலமும், பிற எல்லா நலங்களும் யாவரும் போற்று தற்குரியன. தங்கள் திருக்கைவளத்தால் திருப்பதியில் தொடங் கப்பெற்ற தேவஸ்தான மாணவரில்லம் (Orphanage) நன்கு நடைபெறுகிறது. தமிழ்நாட்டின் ஏழைக் குழந்தைகளுக்குத் தொடங்கப்பெறும் இவ் இல்லமும் என்றும் நன்று நடக்குமென நம்புகிறோம். அறங்களிற் சிறந்ததாகிய இதனைத் தொடங்கி வைக்கும் தங்களைப் பாராட்டிப் பணிகின்றோம்.

அறனும் அன்பும் பொருந்திய பெரியீர்! வாழி.

'குழந்தைகளுக்காகக் குழந்தைகளோடு உயிர் வாழ்வோம்' என்பது எங்கள் குறிக்கோள். செங்கற்பட்டு மாவட்டத்திலே, வாலாஜாபாத்திலே, அந்தநோக்கத்தோடு தொடங்கப்பெற்ற இந்துமத பாடசாலையும் அதன் சார்பிலுள்ள வள்ளலார் இல்லமும் திங்கள்தோறும் ரூ. 12000 செலவில் நடைபெற்று வருகின்றன. குழந்தைகளின் வளர்ச்சியை நாளும் கண்டு கண்டு களிக்கும் நாங்கள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவும் இதற்குக் காரணமாயிருக்கும் எல்லாரையும் வாழ்த்தவும் மகிழ்ச்சியடைகிறோம். நாங்களும், இந்துமத பாடசாலையின் 820 சிறுவர் சிறுமியரும், இல்லத்தின் 650 சிறுவர்களும் தங்களுக்கு எல்லாநலன்களும் அருளிச்செய்ய, அம்பலவாணரின் திருவடி மலர்களைப் பணிகின்றோம்,

திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள்

நாகை.

திருக்கயி லாய பரம்பரை யதனில்
திருவுடன் வந்த சீர்பெருங் குருவாய்த்
தருமையம் பதியிற் றகவுடன் அமர்ந்தே
அருளா ர சாட்சி ஆற்றிடுந் திறலினர்.
ஆண்டவ னிடத்தும் அறிஞர்க ளிடத்தும்
காண்டகு மன்பு பூண்டிடுஞ் சீலர்
அக்கமும் பூதியும் தொக்கவே அணிபவர்
நக்கனைந் தெழுத்தை நாடொறும் நவில்பவர்
காட்சிக் கெளியராய்க் கடுஞ்சொல் இலராய்
மாட்சியைப் பெற்றருளிர் மாசந்நிதானம்
என்றெல் லவரும் இறைஞ்சிடும் தகுதியர்
மன்னுமிவ் வுலகில் வாழ்பவர்க் கெல்லாம்
அன்னமும் சொர்ணமும் ஆடையும் அளிப்பவர்
இப்புவி வாழ்பவர் ஏத்தித் துதித்திடும்
சுப்பிர மணியராந் தூயதே சிககுரு
காவை வளர்க்கவும் ஆவை வளர்க்கவும்
பாவையர் பெற்றிடும் பாலரை வளர்க்கவும்
தண்ணீர்க் குழாய்களும் தக்ககோ சாலையும்
மருத்துவ சாலையும் மாண்பொடு மமைத்தனர்.
அறநெறி வளர்க்கவும் மறநெறி யொழிக்கவும்
ஆலயம் அமைத்தும் அறநூல் பதித்தும்
நூலக மமைத்தும் நுவல்கலா சாலைகள்
ஆற்றவும் அமைத்தே அறிஞர்கள் பலரால்
ஆங்காங் கறிவுரை அளவில ஆற்றவும்
செய்திடுந் திறமதைச் செப்பவும் அரிதே!
பூவல யந்தனிற் பொருந்திவாழ் மக்களின்
தேவையை யறிந்தே செய்குவர் அறம்பல
அவற்றுள் இந்நாள் அகமகிழ் வுடனே
"ஆற்று மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை."
"மண் டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே."
என்றநல் லறவுரை நன்றென உணர்ந்தே

156

மந்திரந் தந்திரம் மருந்திம் மூன்றால்
வந்திடும் பிணிகளை வாங்கிநல் லருள்புரி
வைத்திய நாதனுர் வாழ்ந்திடு கின்ற
வைத்தீ சுவரன் கோயிலில் வளர்ந்திட
இந்து அநாதை விடுதியென் ருென்றை
இலங்கிட அமைக்கவே ஏற்றநல் லமைச்சர்
ஸ்ரீ.கே. வேங்கட சாமிநாயுடு வினுல்
தொடங்கிடச் செய்தார் தூய்மைய தாகவே.
அறநில யங்களை ஆவிபோற் காத்திடும்
அமைச்சர் ஆசியோ டழகுறத் தோன்றிய
அநாதை விடுதியும் அவனியிற் பல்லோர்க்
கருந்தொண் டாற்றி ஆண் டாண்டு வாழ்க!
அனுதை விடுதியை அமைத்தவர் தொடங்கியோர்
தனுதுநல் லாசிகள் சாற்றிய வறிஞர்கள்
யாவரும் இறைவன் பேரரு ளதனுல்
பூமிமேற் பன்னுள் புகழொடும் வாழ்க!
வாழிய! வாழிய!! வாழிய!!!
வாழிய! வாழிய!! வாழிய நன்றே.!!!

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமபுரம், மாயூரம் P. O.

கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(நந்தனஸ்ரீ மாசிமீ 1உமுதல் 30உவரையில்)

(12—2—53 முதல் 13—3—53 வரையில்)

1. மேஷம், அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

அசுவனி கிருத்திகை முதல்பாதம் சம்பந்தப்பட்ட மேஷராசி பலன் முற்பாதியில் விசேஷ நன்மைகளை அடைந்து சுகபோக பாக்கியங்களையும் தொழில் லாபத்தையும் அடையநேரும். பரணி சம்பந்தப்பட்ட மேஷபலன் விருத்தமான புத்தி, நாஸ்திகர் பழக்கம், பெரியோர் சாபத்தால் ஆபத்துக்கள், எங்கும் அபவாதம் பயம் இவைகள் ஏற்படும். திங்கள் சனி சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை, ¾ ரோஹிணி, மிருகசீரிஷம். ½.

இம்மூன்று நக்ஷத்திரக்காரர்களும் லாபமடைவார்கள். எதிர்பார்த்ததைவிட விசேஷ நன்மைகள் கிட்டும். நஷ்டமான தனம் வரும். விவசாயத்தில் லாபம் கிடைக்கும். காலி கன்று சேர்க்கை உண்டாகும். வாஹன லாபம் ஏற்படும். வேலை ஆட்கள் நூதனமாய் சேருவார்கள். வியாஜ்ஜியம் ஜயிக்கும். பந்துமித்திராளுடைய சேர்க்கையும். சுபசோபனதி சந்தோஷமும் உண்டாகும். நன்மைகள் விருத்தி ஏற்பட ஏற்பட லோபத் தன்மையும் அலக்ஷிய புத்தியும், நன்மை செய்தவர்களிடத்தும் பெரியோர்களிடத்தும் தெய்வத்தினிடத்தும் அன்புக்குறைவும் ஏற்படும். கடவுளால் அளிக்கப்பட்ட நல்லறிவைக்கொண்டு புத்தியை மாத்திக்கொண்டு நல்வழியே நடந்துகொண்டால் விசேஷ நன்மையடையலாம். வெள்ளியும் சனியும் சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை, புனர்பூசம் ¾.

மிதுனம் சம்பந்தப்பட்ட புனர்பூச பலன். மிகுந்த சந்தோஷத்தைத் தரும். வெகுநாளாக எதிர்பார்த்திருந்த காரியத்தைச் சுலபமாக சாதிக்கலாகும். நல்லோர் பெரியோர் ஆசியைத்தரும். ஆஸ்திக புத்தியும் தெய்வசக்தியும் விளங்கும். விவசாயத்தில் விசேஷ லாபத்தையும் சத்துருக்கள் சரண் அடைதலையும்

செய்யும். மனம் சாந்தியாகும். எளிதில் சகல காரியங்களும் சாதிக்கும்படியான சந்தர்ப்பம் ஏற்படும். மற்ற இரு நக்ஷத்திரங் களுக்கும் சுகமும் துக்கமும் கலந்து நடக்கும். மாதக்கடைசியில் ஐந்து தினங்கள் நலன்காட்டும். புதன் வியாழன் சுபவாரமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼, பூசம், ஆயில்யம்.

பூசம் சம்பந்தப்பட்ட கடகராசி பலன் சென்ற மாதம் போலவே அசுபத்தையே தரும். பல கஷ்டங்கள் அவமானம் இவைகளை அடையநேரும். மற்ற இரு நக்ஷத்திரபலனும் சுபத் தைத்தரும். விசேஷ லாபம் சம்பூர்ண தெய்வசக்தி பிரகாசித்தல், அசாத்தியமெல்லாம் சுலபமாக சாதித்தல், அண்டினவர்களுக்கு உபகாரம் செய்தல். ரிணரோக சத்துருக்களுடைய பாதைநீங்கி சுகமடைதல், தேவதா குருபக்தி உண்டாகுதல், செவ்வாய் சுக்கிரன் சுபவாரமாகும்.

5. ஸிம்மம். மகம், பூரம், உத்திரம் ¼.

மகம் பூரம் சம்மந்தப்பட்ட சிம்மராசி பலன். விசேஷ நன்மையளிக்கும். உத்யோகலாபம், கீர்த்திபத்திரம் கிடைத்தல், தொழில் மேன்மை, சஞ்சார பலன், மேலோர் பெரியோர்நேசம். யஞ்ஞயாகாதி பலன், சுபசோபனுதிகள், தீர்த்தாடனம், தூர யாத்திரை முதலிய சுபங்கள் நடைபெறும். உத்திரம் முதல் பாதம் மாதம் முற்பாதியில் சுபத்தையும் பிற்பாதியில் நஷ்டத் தையும் கவலையையும் தரும். வெள்ளியும் வியாழனும் சுபவார மாகும்.

6. கன்னி. உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½.

உத்திரத்துக்கும் சித்திரைக்கும் கன்னியாராசி பலன் சில அசாத்திய சாதனங்களையும்மேலோர் பெரியோர் நேசத்தையும் கடன் நிவர்த்தியாகுதலையும், தொழில் மேன்மையையும், சபாப் பிரவேசத்தையும். கீர்த்தி பத்திரத்தையும் தரும். மனதுக்குச் சந்தோஷமுண்டாகும். ஹஸ்த நக்ஷத்திர பலன் இதுவரை பார்த்திராத சில ஆச்சரியங்களைத் தெய்வத்தோற்றமாகப் பார்த் தலையும், சம்பூர்ண தெய்வசக்தி பிரகாசித்தலையும், விசாலமான புத்தி ஏற்பட்டு மஹா சாந்தர்களாக பிரகாசித்தலையும், எங்கும் கீர்த்தியும் ஜயமும் ஏற்படுதலையும், தானதர்ம பிரதிஷ்டா பலன்களையும் தரும். குரு, சுக்கிரவாரங்கள் சுபத்தைத் தரும்.

7. **துலாம்.** சித்திரை $\frac{1}{2}$, சுவாதி, விசாகம் $\frac{3}{4}$.

சித்திரைக்கும் சுவாதிக்கும் துலாராசி பலன் கஷ்டத்திலிருந்து விடுபடுதலையும், சத்துரு மைத்திரம் ஆகுதலையும், விஜயத்தையும், தன தான்ய லாபத்தையும், பெரும் உபகாரத்தை தெய்வ பலத்தால் மித்திராள்மூலம் அடையச் செய்தலையும் செய்யும். விசாக நக்ஷத்திரம் துலாராசி பலன் குடும்ப கஷ்டங்களையும், தனநஷ்டத்தையும் தொழில் குறைவையும் சதா கிலேசத்தையும், நீச சண்டாளர்கள் கலஹத்தையும் உண்டு பண்ணும். சனி செவ்வாய் கெட்ட பலனைத் தரும், புதன் வியாழன் சுபவாரமாகவும் செய்யும்.

8. **விருச்சிகம்,** விசாகம், $\frac{1}{4}$, அனுஷம், கேட்டை.

விருச்சிகராசி பலன் பூராவுமே சுபமாகும் கலியாண வார்த்தை, உத்யோக லாபம், தூரசஞ்சாரம், வாஹனவிருத்தி, ஆரோக்கியம் பெரியோர்கள் அன்பு, தெய்வானுகூலம் முதலிய சுபங்கள் ஏற்படும். சனி செவ்வாய் தவிர மற்ற வாரங்கள் சுபமாகும்.

9. **தனுசு.** மூலம், பூராடம், உத்திராடம் $\frac{1}{4}$.

மூலநக்ஷத்திரம் சம்பந்தப்பட்ட தனுராசி பலன், ரோகத்தையும் நஷ்டத்தையும் அபவாதத்தையும் தரும். பூராடத்துக்கு விசேஷ லாபத்தையும் சௌகரியத்தையும் தந்து, குடும்பத் தொல்லையை அதிகமாக்கும். எதிர்பாராத வியாதிகளாலும், சத்துருக்களாலும் துன்பமுண்டாகும். உத்திராடத்துக்கு அதிக வரத்தும் குடும்ப மேன்மையும், தெய்வீக சக்தியும், தொழில் லாபமும், மனதுக்குச் சந்தோஷமும் உண்டாகும். புதன் வியாழன் வெள்ளி சுபவாரமாகும்

10. **மகரம்.** உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$,

சிரவண நக்ஷத்திரம் சம்பந்தப்பட்ட மகரராசி பலன் மஹா சந்தோஷத்தையும் வித்யாவிருத்தியையும் பந்துமித்திராள் மூலம் உபகாரத்தன்மையையும் பெரியோர்களாலும் தபோபுல

முள்ளவர்களாலும் அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகி உலகில் நன்மதிப்பை அடைதலையும் செய்யும். மற்ற இரண்டு நக்ஷத்திரபலனும், மிசிரமாகும். மாதக்கடைசியில் சில சௌக்கியத்தையும் ஆடை ஆபரணச் சேர்க்கையும். சுபங்களையும் தரும். புதன் வியாழன் சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் ½, சதயம், பூரட்டாதி ¾,

அவிட்டத்துக்குப் பூரண சுபத்தையும் மற்ற இரண்டுக்கும் அலைச்சலின்பேரிலும் உழைப்பின்பேரிலும் நன்மையையும் செய்யும். வியாபாரியும் தொழிலாளியும் சுகமடைவார்கள். பூமிக்குள்ளோரும் தனவந்தர்களும் பாதிக்கப்படுவார்கள். மூன்று நக்ஷத்திரமும் சம்பந்தப்பட்ட கும்பராசிக்காரர்கள் எல்லோருக்குமே மாதத்தின் நடுப்பகுதி 10 தினங்கள் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ¼, உத்திரட்டாதி, ரேவதி.

மூன்று நக்ஷத்திரக்காரர்களும் எதிர்பாராதபடி தெய்வ பலத்தை அடைந்து சந்தோஷமடைவார்கள். அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகும். தொழில் ஓங்கும். எங்கும் செல்வாக்கு விருத்தியாகும். ரிணரோக சத்துருக்கள் பாதை நிவர்த்தியாகும். மனம் சந்தோஷமடையும். மத்திய காலங்களில் சுவல்ப நஷ்டமும் கவலையும் காட்டும். ஆனாலும் சுபமே மேலோங்கும். வெள்ளியும் ஞாயிறும் சுபமாகும்.

குறிப்பு :— கோசாரபலன் தசாபுத்தி பலனை அனுசரித்தே நடக்கும். உலக ஜாதகப்படியும் சுபாசுபங்கள் ஏற்படும். உலகத்தின் கிரக அமைப்புக்குப் பிரஜைகளின் தர்மாதர்மமே காரணம். இக்காலம் அதர்மமே ஓங்கி நடப்பதால் கிரகங்களின் அமைப்பும் மாறுகிறது. அநேகம் உத்பாதங்களும் துர்பிக்ஷமும் காட்டக்கூடியதாக இருப்பதால் சஜ்ஜனங்கள் தெய்வசக்தியைப் பிரார்த்தித்து நல்வழியில் நடந்துகொண்டால் உலகம் சுபிக்ஷமடையும். அசுபபலன்கள் மாறும். சுபபலன்கள் அதிகமாகும்.

परव्योमं तु षष्ठं च परावस्था तु सप्तमम् ।

என்றுபின்,

विश्वग्रासाष्टमं चैव उपशान्तो नवस्तथा ।
शिवभ्रष्ठ दशं चैव वाक्यावस्था समीरिता ॥

என நவாவத்தை வருமாறு உணர்க. இன்னுமதிலே,

अनुर्महत्वं तद्व्याप्तं जीवात्मपरयोदितम् ।
एतदर्थं तदर्थं च तत्पदं परमं पदम् ॥
विश्वग्रासं परं गुह्यं सर्वात्म शिवमुद्भवम् ।
तत्सर्वं व्याप्ति संयुक्तं तच्छून्यं शान्तिसम्भवम् ॥
तच्छिवावस्थितं शान्तं शान्त्यतीतं परात्परम् ।

என வருமாற்றானுமுணர்க. இவற்றுள்,

अनुर्महात्वं तद्व्याप्तं जीवात्मपरयोदितम् ।
एतदर्थं तदर्थं च तत्पदं परमं पदम् ॥

செவிமெய்வாய் கண்மூக்குச் சேரிந் திரிய
மவியின் றியமன மாதிக ளைந்தும்
குவிவொன் றிலாமல் விரிந்து குவிந்து
தவிர்வொன் றிலாத சராசரந் தானே. 2589

ஈண்டுச் செவி...பிரபஞ்சங் கூறியவாற்றல் விசுவக் கிராசமும் சாரீரப்பிரபஞ்ச நிவிர்த்தி என்பதாம். இவ்வாறு வியஷ்டி நிகழ்ச்சி, சமட்டிக்குக் காரணமாகலின்,

உடலா யுயிரா யுலகம தாகிக்
கடலாகிக்கார் முகினீர் பொழிவானகி
யிடை யாயுலப்பிலி யெங்குந் தானகி
யடைவாம் பெருவழி யண்ணி நின்றனே. - திரும. 413.

உலகமெலாந் தன்மயமாயிருத்தல் கூறியவாறு. அன்றேற் காரணோபாதி புறம்பாமுலகிலற்றுவதெலாற் கூடா எனவே

விசுவமேலாந்தன் மாதலா...ம் விபுத்துவத்தால் வரு நிறைவு. அது அறிவானந்தசித்தியில்,

ஒழிவறவே செகமெங்குநிரம்பி...யொளியுருவா
யழிவுறுகின்ற செகத் ...... மெனசெ......நீ
கழிவுறவே யிது செப்பாயெனக் கண்ணினீர் மல்கியே
மொழியுநீ ...யறியெனிது செப்பெங்கள் முன்னவனே.

உறைந்து செகத்து முன்னுண் டில்லை
யென்றதிங் கோர்த்திடவே
நிறைந்து பரமது நீயெதுவாகும்
நிலை யறிவால்
சிறந்த வனுபவத் தார்க்கன்றி
யார்க்குந் தெரிவரி...
அறைந்தது காணுறு மருமறைநீ
யிதை யாய்ந்துகொள்ளே.

என வருமாற்றான் உணர்க. இனிக் **கனவவற்றை விழுங்கே** லென்பது விசுவக்கிராசம் சிவனது கனவவத்தை யென்ற வாறு. அது, எல்லாஞ் சிவமயமாகப் பார்த்துத் தேகாதி பிரபஞ்சங்காணுதொழிதல். அது ஞானசித்தியில்,

विश्वग्रासं परं गुह्यं सर्वात्मशिवमुद्भवम् ।
तत्सर्वं व्याप्तिसंयुक्तं तच्छून्यं शान्तिसम्भवम् ॥

என முன் உதாகரித்தவாற்றான் உணர்க. திருமந்திரத்திலும்,

தானே திசையு மைம்பூதமுந் தத்துவ
மானு தபோதமு மாணவ போதமு
மூனுபாதி யுடனேழு முள்ளமு
மானுவகிலமு மத்தனு மாமே.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதல் பூதம் 2290

பாஞ்சோதியாகும் பதியினைப் பற்ற
பரஞ்சோதி யென்னுட் படிந்ததன்பின்னைப்
பரஞ்சோதி யுள்ளியான் படியப் படியப்
பரஞ்சோதி யென்னை பரையொடுண்டானே. 2842

பரனெங்குமாகிப் பரமாகுநின்ற
திரமெங்கணுகச் செறிவெங்குமெய்தி
யரனங்கணுவு மகத்து மென்ருகும்
வரமுன்னது கண்டியான் மாண்டற்றவாறே. 2590

எனவரும். இவ்வாறு நிராமயதேவர் நூலினும்,

வாங்கு காந்த சந்நிதி வயங்கிரும்பு போலவு
வோங்கு நல்லிரவி முன்னுலகர் சேட்டைபோலவுந்
தீங்கு செய் பொறிகளும் நிறைந்த வாயுவுந் திகழ்ந்
தே ... ...
...தொடுங்கிநி......லை திரைசி ாமானவை
யெல்லாம் டன்மீது...வாயில்
வா ... ம நிலவு சாரசரம நீடுல கெல்லா
யமாகி யொடுங்கும்.

என வருமாற்ருன் உணர்க. ஈண்டுப் **பரம்** என்றது அபேதோபசாரத்தாற் சிவனும் ... நன்மை ... தருமுப சாந்தம் உபாதி யென்பது முன்னுதாகரித்தவற்றுள்,

तत्सर्वं व्याप्तिसंयुक्तं तच्छून्यं शान्तिसम्भवम् ।

என்பதனுல் விளங்கும். திருமந்திரத்திலும்,

தொழிலிச்சை ஞானங்க டொல்சிவ சீவர்
கழிவற்ற மாமாயை மாயையி னுகும்
பழியற்ற காரண காரியப் பாழ்விட்
டழிவற்ற சாந்தாதீ தன்சிவ னுமே. 2334

எனவும் பிறவும் வரும். இவ்வாறு நிராமயதேவர் நூலினும்

தத்துவந்தீர்ந்த பாழுந்தனையறிந்தற்ற பாழு
முத்தமவுபசாந்தத் ... முன்னிய மூன்று பாழுந்
தொத்திடு மாயையோடுந் தொல்பராசத்தியோடுந்
சித்து ... சிவசத்தி ... பாற்றிருந்தது திரிதல் காண்டி...

காரிய காரண வுபாதி கைவிட
வோரியல்பாமுபசாந்த முற்றதே
பேரியனுயிர் பரமிரண்டினைக்கியமு
மோரியல்பாகி வேறின்றி யென்றதாம்.

என வருமாற்றான் உணர்க. **எல்லாம் நழுவினபேருணர் வாகுமுயர்ந்த சிவதுரிய** மென்பது ஞானசித்தியில்,

तत्सर्वं व्याप्तिसंयुक्तं तच्छून्यं शान्तिसम्भवम् ।
तच्छिवावस्थितं शान्तं शान्त्यतीतं परात्परम् ॥
उपशान्ति(ञ)तितः प्राप्तं परजीवैक्यसाधनम् ।
आत्मा प(र)शिवं चैते त्रिपदार्थत्रिशोधना ॥

என வருமாற்றான் உணர்க. இவ்வாறு திருமந்திரத்திலும்,

காரிய மேழ்கண் டறுமாயப் பாழ்விடக்
காரண மேழ்கண் டறும்போதப் பாழ்விடக்
காரிய காரண வாதனை கண்டறுஞ்
சீருப சாந்தமுப் பாழ்விடத் தீருமே
காரிய காரணங் காணு முப்பாழ்விடச்
சீரிய தான சிவ மென லாமே.

எனவும் பிறவும் வரும் இவ்வாறு நிராமயதேவர் நூலினும்,

ஒழியா வுபாசாந் தமதா யுள துங்
கழியா விடுகா ரணகா ரியமே
மொழியா வகையுல கற்றவிடத்தி
லழியா வுணர்வே சிவமா வதுவே.

என வரும். இந்நிலைதான் **குருவடிவாஞ் சுயம்பிரகாசமுமே** யென்பது ஞானசித்தியில்,

நெல்லையில் தமிழ்த் திருநாள்

திருநெல்வேலி ஜங்ஷன் தருமபுர மடத்தில், தருமை அருள் பெறு நெல்லை அருணகிரி இசைக் கழகத்தினர், கடந்த 6 ஆண்டுகளாகத் தமிழ்த் திருநாள் கொண்டாடுவது அனைவரும் அறிவர். அந்தமுறையில் இந்த ஆண்டிலும் 6—2—53 முதல் விழா நடைபெற்று வருகிறது. முதல்நாள் திருவாசக விழா. மறுநாள் 7உ திருநெல்வேலிப் புலமை. 8உ வள்ளுவர் விழா. 9உ வழிபாட்டிலக்கியம் என்ற அமைப்பில் பேரறிஞர்கள் பலர் சொற்பொழிவு ஆற்றினார்கள். 10உ தமிழ்மொழியில் வானநூல், பௌதிகநூல் உள்ளிட்ட எல்லாத் தத்துவக் கருத்துக்களும் அடங்கியிருக்கின்றன என்பதைப் பல அறிஞர்கள் எடுத்து மொழிந்தார்கள். 11உ இன்றைய நிலையில் மக்களாட்சி நன்மை பயக்குமா என்பதை உடன்பட்டுப்பேசுதல், மறுத்துப்பேசுதல் என்றவகையில் சொற்போர் நிகழ்கிறது. 12உ மொழிமரபு என்ற பிரிவில் தமிழ், இந்தி, கன்னடம், தெலுங்கு, மலையாளம், சம்ஸ்கிருதம் என்ற ஆறு மொழிகளைப்பற்றியும் ஆறு புலவர்கள் பேசுவார்கள். இது போலவே பல தலைப்புக்களில். 12உ கவிதைகளைப்பற்றியும், 13உ அரசியல் அறிவுபற்றியும் பலர் பேருரை நிகழ்த்துவார்கள். இடையிடையே உரையாடல், உடற்பயிற்சி, ஓரங்க நாடகம், கல்வித்திரை, கதைகளி, அவதானம், ஆடல் பாடல் ஆகியனவும் நிகழும். குறித்தநேரத்தில் தொடங்குதலும், முடித்தலும் இக்கழகத்திற்குத் தனிச்சிறப்பு. எல்லாவகையிலும் இத் தமிழ் விழா பெருவிருந்தாக அமைந்திருக்கின்றது. ஆதீனத்தின் சார்பாக ஆதீனக்கல்லூரித் துணைத்தலைவர் வித்வான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களும், திருச்சி மௌனமடம் கட்டளைவிசாரணை வித்வான், ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளவர்களும் கலந்து சொற்பொழிவாற்றினார்கள். குறித்தநேரத்தில் அன்பர்கள் அனைவரும் சென்று தமிழமிழ்தம் அருந்தி இன்புறுவார்களாக.

ஜன்மநக்ஷத்திரத் திருநாள்

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவஸ்தலங்களில் ஆதீனச்சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகங்களையும் அச்சிட்டு வழங்கிவருதல்போல, இம்மாதத்திலும் 4—2—53 அன்று திருமீயச்சூர், திருமீயச்சூர்இளங்கோயில் ஆகிய இரண்டு ஆலயத்திலும் அபிஷேக ஆராதனை செய்வித்து, தலப்பதிக வெளியீடுகளும் வழங்கப்பெற்றன.

Regd. No. M. 4454. GNANASAMBANDAM.

குடியரசுதின விழா

தருமபுர ஆதீனத்தில் நடைபெற்றுவரும் ஸ்ரீ குருஞான சம்பந்தர் ஹயர் எலிமெண்டரிஸ்கூல், தேவாரப்பாடசாலை, ஆகம பாடசாலை, தமிழ்க்கல்லூரி, வடமொழிக்கல்லூரி, இசைக்கல்லூரி, ஓரியண்டல் ஹைஸ்கூல் இவைகளில் பயிலும் மாணவ மாணவிகள், ஆசிரியர் ஆசிரியைகளுடன் 26—1—53 காலை 9 மணிக்கு தேசியகீதம் பாடிக்கொண்டு ஊர்வலம் வந்தார்கள். ஆதீனக் கூட்டுறவுப் பண்டகசாலையில், ஆதீனம் ஏஜண்ட் பிர்மஸ்ரீ K. சுந்தரேச அய்யர் அவர்கள் கொடியேற்றினார்கள். ஆதீனக் கல்விநிலையங்களின் சார்பில் ஆதீனக் கல்லூரியில் கொடியேற்று விழா நடந்தது. திருக்கடவூர் தேவஸ்தானம் கட்டளைவிசாரணை ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் கொடியேற்றினார்கள். மாணவர்களுக்கெல்லாம் இனிப்பு வழங்கப்பட்டது.

சொற்பொழிவுகள்

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான வைத்தீசுவரன் கோயில் தேவஸ்தானம் சண்முகவிலாசப் பிரசாரசபா மண்டபத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி திருவிழாவை முன்னிட்டு நடைபெற்றன வருமாறு :— 6—2—53 மாலை 6 மணிக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தத்துவப் பேராசிரியர், திரு. C. இராமலிங்கம் அவர்கள் M.A., "பிரார்த்தனையின் பெருமை", 7௳ இரவு 7 மணிக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர், வித்வான், திரு. G. சுப்பிரமணியபிள்ளையவர்கள் M.A., B.L., "கண்கண்ட தெய்வம்", 8௳ மாலை 6 மணிக்கு தருமபுர ஆதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள் "மெய்த்துணை", 9௳ மாலை 6 மணிக்கு இசையரங்கு :— தருமபுர ஆதீன இசைக்கல்லூரி ஆசிரியர்கள், திரு. P. சுவாமிநாத முதலியார் அவர்கள் பாட்டு, திரு. T. S. சம்பந்தம்பிள்ளையவர்கள் பிடில், திரு. R. விசுவநாதய்யரவர்கள் மிருதங்கம். 10௳ மாலை 6 மணிக்கு ஸ்ரீரங்கம், தருமபுர ஆதீன வித்வான், கீர்த்தனகுலசேகர பாகவதர், பிர்மஸ்ரீ S. விஜயராகவாசாரியார் & பார்ட்டியார் "கந்தன் பால லீலை" கதாகாலக்ஷேபம்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayuram) 9—2—1953.